
# சிரித்திரன்

### நாகரீக உலகம்




★ **ஊக்க**

## மாத்திரை

போய்விட்ட பொழுது போனதுதான்; வருகின்ற பொழுதுகளையோ வரும் போதுதான் அனுபவிக்க முடியும்; ஆகவே நிகழ்ந்து கொண்டிருக்கும் பொழுதைச் செலவழிப்பதில் அக்கறை எடுத்துக் கொள்ள வேண்டும்.

''கடிகாரத்தைப்போல ஒவ்வொரு விநாடியும் மதிப்புத் தந்து வாழ்ந்தவர்கள் புத்தர், இயேசு, காந்தி போன்ற மணிதக் கடிகாரங்கள்.

- கலைவாணர் கிருஷ்ணன்

எமது
கொழும்பு
விநியோகஸ்தர்:


மணியம்
24, ஸ்ரீகதிரேசன்வீதி.
கொழும்பு - 13.

விலை ரூபா 2-50 ஒக்டோபர் 1984

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உங்கள் வரவு நல்வரவாகுக
வண்ண, வண்ண ஆடைகளை எண்ணம்போல்
தேர்ந்தெடுக்க வருக வருக என
வரவேற்கின்றோம்.

யாழ்நகரில் ஓர் சேலைப் பூஞ்சோலை



## சிவகணேசன் ஸ்ரோர்ஸ்

41. பெரியகடை : யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


**சிரித்திரன்**

நகை 21 சுவை 10 ஒக்டோபர் 84

# அன்புக்கோர் ஆய்வுகூடம்!

''கல்வி என்ன செய்தது''. மாட்டிற்கு குறிசுடச் செய்தது. வாசகர் ஒருவர் கேள்விக்கு மகுடியார் உறுத்திய பதில் என்னைச் சிந்திக்க வைத்தது.

கல்விக்கு இருதயமில்லை. கல்வியின் குறிக்கோள் சொத்து. எழுதப் படித்துவிட்டு காய்ச்சிய கோலால் தனது பெயரை மாட்டில் எழுதுகிறான் மனிதன்.



அறிவை வளர்த்து அணுவைப் பிளந்து அணுக்குண்டு தயாரிக்கின்றது எமது கல்வி. தினமும் ஐம்பது கோடி மக்கள் உணவின்றி நித்திரைக்குப் போகும் செய்தி இந்த அணுக்குண்டு அறிஞருக்கு எங்கே எட்டப்போகின்றது? எட்டினால் அவர்கள் இதயம் இளகவா போகின்றது. இருதயமில்லாக் கல்வியல்லவா அவர்களை விஞ்ஞானிகளாக்கியது.

தொழிற்சாலைகள் யந்திரங்களை உற்பத்திசெய்து வெளியில் தள்ளுவதுபோல் கலாசாலைகளும் மனிதனை யந்திரமாக்கி வெளியில் தள்ளுகின்றன. மனிதன் ஆத்மா இல்லாத இயந்திரமல்ல. அவனில் ஆத்மா உண்டு. அதை உணரச் செய்வதே கல்வியின் பெரும் பணி.

''மனிதன் சிந்திக்கத் தெரிந்த பிராணி.'' ''மனிதன் ஓர் அரசியல் பிராணி'' ''மனிதன் ஓர் சிரிக்கத் தெரிந்த பிராணி'' மனிதன் ஓர் பேரம் பேசும் பிராணி என்றெல்லாம் தத்துவஞானிகள் மனிதனைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். மனிதன் பரிணாம வளர்ச்சியின் வழித் தோன்றலாகையால் பிராணிக் குணம் அவனை முற்றாக விட்டு விலகவில்லையென எண்ணுகிறார்கள்போலும். ஆதலால்தான் சிந்திக்கும் பிராணி அரசியல் பிராணி என்றெல்லாம் அழைக்கின்றார்கள்.

மனித வர்க்கத்தில்தான் ஹிட்லர், முசோலினி, இடி அமின் தோன்றினார்களென்பதற்காக நாம் மனித வர்க்கத்தைச் சபிக்கக் கூடாது. புத்தன், யேசு, காந்தியும் மனிதவர்க்கத்தில் தோன்றியவர்களேயெனச் சமாதியடையவேண்டும்.

நாளொன்றிற்கு 200 கோடி யுத்த ஆயுத உற்பத்திக்கு செலவிடும் உலகம் அதை, உலகை வாழ வைப்பதற்குச் செலவு செய்தால் என்ன. இன்று உலகிற்குத் தேவை அன்பு மாக்கத்தைக் கண்டு பிடிக்கும் ஆய்வுகூடங்கள்.

## வலயமாற்றம்

ஒருவர்: சுதந்திர வர்த்தக வலயத்திலிருந்து நீங்கள் எப்போது கண்காணிப்பு வலயத்துள் வந்தீர்கள்?

மற்றவர்: ......? நீங்கள் என்ன கேட்கின்றீர்கள்? எனக்கு விளங்கவில்லை!

முதல்வர்: அதுவா ? நீங்கள் எப்போது கல்யாணஞ் செய்துகொண்டீர்கள் என்று கேட்டேன்!

மற்றவர் ............!

— நாயன்மார்க்கட்டு ப. மகேந்திரதாசன்

## மனேலயம்


ஒரு நாள்,
வெயில் இன்னும் வராத
காலை,
பல்லைத் தேய்த்தபடி
முற்றத்தில், சிறு நடையில்
உலவி வர,

மேலிருந்து இறங்கிற்று
பறவை இறகொன்று.
காற்றில்லாத போதும்
மெதுவாய்,
மிக மெதுவாய் அசைந்து
ஒரு
பூவிலும் மிருதுவாய்ச்
செத்துப் போயிற்று.

— சேரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசகர்களே,
'மகுடி'யில் இடம்பெறும் தரமான கேள்விகளுக்கு மாதம் ரூபா 10-00 பரிசு வழங்கப்படும். அனுப்புங்கள் உங்கள் கேள்விகளை.
மகுடி, 550, கே, எஸ், வீதி, யாழ்ப்பாணம்.



● செல்வி ரஞ்சனு நாகராஜன் நல்லூர்.

கே. டாக்டர் தொழில் எப்படிப் பட்டது?

ப. தெய்வீகமானது... சிவனுக்கு வைத்தியநாதன் என்ற பெயரும் ஒன்று உண்டல்லவா.

ஃ

● சி; கணபதி வவுனியா

கே. நாட்டில் ஒரு பகுதியை அபிவிருத்தி செய்தும் மற்றப் பகுதியை அபிவிருத்தி செய்யாமல் விடுவதும் எதைப் போன்றது ?

ப: உடலில் ஒரு பாகத்திற்கு இரத்தம் ஓடாமல் தடை செய்வதைப்போன்றதாகும்.

ஃ

● த. சிவகுமார் உடுப்பிட்டி

கே: பணம்தான் மேலானது' கல்வியல்ல என்கிறேன் ! ?

ப: உங்கள் மூளை நிர்வாணத்தை பட்டால் மூடமுடியுமா?

ஃ

● சி. பரமநாதன்

கே: மரணத்திற்குப் பயப்படாதவன் எவன்?

ப: மனைவிக்குப் பயந்தவன்.

ஃ

● செ. முருகு மூளாய்

கே: மானமில்லாச் செயல்?

ப: பட்டகடன் கொடுக்காது பட்டு உடுத்துவது.

ஃ

● சி. விக்னேஸ்வரன் அடம்பன்

கே. உலக அரசியலைப் பார்த்தால் மிருகத்தனமாகத்தென் படுகிறதே!

ப: அன்றே கிரேக்க தத்துவ ஞானி அரிஸ்ரோட்டில் மனிதனை ஓர்''அரசியல் மிருகம்'' என்று கூறிவிட்டாரே!

ஃ

● பரநிருபசிங்கம் கட்டுடை

கே: மனிதன் வாழத் துடிக்கின்றான்?

ப: நாடியும், இருதயமும் வாழத் துடிக்கின்றன. மனிதனே இரண்டிற்கும் நோய் வரவழைக்க வாழ்க்கை நடாத்துகின்றான்.

ஃ

● சி, ராஜநாதன் கொட்டாஞ்சேனை

கே: அரசியல்வாதிகளுக்கு மந்திர வித்தை தெரியுமா?

ப: ஆம்... மலையை மடுவாகவும் மடுவை மலையாகவும் படம் பிடித்துக் காட்டவல்ல மாந்திரிகர்கள்.

ஃ

● த. பரந்தாமன்; மல்லாகம்.

கே: நாம் பொருளை ஆராதனை பண்ணுபவர்கள், அறிவை அலட்சியம் பண்ணுபவர்கள் அப்படித்தானே!

ப: புத்தகங்களை பழைய பேப்பர்காரனுக்கு விற்கின்றோம். நகையைப் பிள்ளைக்குக் கொடுப்பதற்கு அடைகாக்கின்றோம்.

ஃ

● சி. நமசிவாயம் கரவெட்டி.

கே; இராவணன் இன்று இலங்கையில் இருந்தால்

ப: இருபது கரத்தாலும் நுளம்பு அடிப்பான்.

ஃ

● சி. திருநாவுக்கரசு அச்சுவேலி

கே: விஞ்ஞானிகளை நீர் வேண்டுவதென்ன ?

ப: முதல் உணவில்லாதவர்களின் வாயைச் சிந்தியுங்கள் பின்பு செவ்வாயைச் சிந்தியுங்கள்.

ஃ

● வடிவேலு. பரந்தன்

கே: இன்று யாரிடம் குறிக்கோள் உண்டு.

ப: திசைமானியிடம், தேசாபிமானியிடமல்ல.

ஃ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

● சி. மாணிக்கம்
திருகோணமலை
கே: உலக நிலைபற்றிச் சிறிது கூறும்?
ப: காடு அழிந்துகொண்டு போகிறது. காட்டுமிராண்டித்தனம் வளர்ந்துகொண்டு போகின்றது.

ஃ

● செல்வி மணிமேகலை நாகநாதன் எட்டியாந்தோட்டை
கே: எவன் சிறந்த பத்திரிகையாளன்?
ப: தகவலுக்கு ஆவலாயிருக்கும் மக்களுக்கு அவலாய் செய்தி கொடுப்பவன்.

ஃ

● சி. நாகராஜன். அடம்பன்.
கே: மதம் என்ன செய்தது ?
ப: சுவரில்லாத சுவர்க்கம் போவதற்கு மக்களிடையே சுவர்கள் எழுப்பியது.

ஃ

● க. அரசு. கோப்பாய்.
கே. பொன்னம்பலம் இராமநாதன்பற்றி உங்கள் கருத்து?
ப: அன்றைய பிரச்சினையை பூதக்கண்ணாடியில் பார்த்தவர்... எதிர்காலத்தை துரதிஷ்டிக் கண்ணாடியில் பார்க்காதவர்.

ஃ

● க. தனபாலசிங்கம் அச்சுவேலி
கே: பெண் எப்போது அழகாகத் தென்படுகின்றாள்.
ப: நாணத்தால் வானம்போல் வதனம் சிவக்கும்போது.

● எஸ். எம். ரஹீம். மன்னார்.
ப: வல்லரசுகளின் அணுக்குண்டு எல்லாவற்றையும் ஒன்று சேர்த்தால்,
ப: ஐக்கிய நாட்டுக் கட்டிடத்தின் மேலாக உயர்ந்து நிற்கும்.

ஃ

● செல்வி மாலதி தம்பையா, நல்லூர்.
கே: எமது மக்கள் இன்று எதை நாகரீகமெனக் கருதுகிறார்கள்.
ப: தமிழ்ப் பண்புக்கு எதிரான எல்லாவற்றையும் நாகரீகமெனக் கருதுகின்றனர்.

ஃ

● சி, சிங்கம். பளை.
கே: அயல்வீட்டில் மனிதன் எப்போ ஆத்திரம் கொள்கிறான்.
ப: ஒரே இசைப்பதிவை திரும்பத் திரும்ப ஒலிபரப்பும் போது.

ஃ

● ப. நித்தியானந்தன்.
உடுப்பிட்டி
கே: எவன் சரீரப் பிரக்ஞை உள்ளவன்? எவன் சமூகப் பிரக்ஞை உள்ளவன்?
ப: நிலைக்கண்ணாடியில் தன்னைத் தரிசிப்பவன் சரீரப் பிரக்ஞை உடையவன். நாட்டு நிலையில் தன்னைத் தரிசிப்பவன் சமூகப் பிரக்ஞை உடையவன்.

ஃ

● சி. சிவலோகநாதன்
கோப்பாய்.
கே: உலகில் பொதுவுடைமைத் தத்துவத்தை எவன் முதன் முதலாக உணர்ந்தவன்.
ப: தமிழன் என நினைக்கின்றேன் "யாமார்க்கும் குடியல்லோம்," "யாம் பெற்ற இன்பம்,... என்று யாம், யாம் என்று பாடல்கள் யார்த்தவன் தமிழன்.

ஃ

● சி. நாதன். வேலணை.
கே: எது ஜனநாயகமாகாது?
ப: வாக்களித்த மக்களுக்கு அவர்களுக்குப் புரியாத அரசியல் நடாத்துவது.

ஃ

● உமா: சோமசுந்தரம்.
கரவெட்டி
கே: மானம் பெரிதென வாழ வழிகாட்டும் மகுடியாரே?
ப: சொத்துக்காக அண்ணாவுடன் வழக்குப் பேசாதே! சீதனத்திற்காக மாமாவுடன் பேரம் பேசாதே! உழை... உழை... ... உழைப்பால் உயர்ந்த வீட்டில் உறங்கு.

ஃ

★ மணி புத்தூர்.
கே: சுயநலமிகளால்தான் உலகம் ஒரு சுடுகாடு ?
ப: உண்மை...
உழைப்பவனுக்கு முன் சுயநல ஓநாய்கள் ஊளையிடாவிடில் உலகம் ஒரு விளைநிலம்.

ஃ

● செல்வி சசிகலா தம்பையா. நல்லூர்.
கே: ஒரேஒரு கலாச்சாரம் ஒரு நாட்டிற்குப் போதுமென்று கூறுவது அழகா?
ப: பல வர்ணங்கள் கொண்டது தானே வானவில்.

ஃ

● சரஸ்வதி கணேஷ்.
மாங்குளம்.
கே: மனிதன் பூமியில் தோன்றியதால் தான் இந்த அழிவு எல்லாம்?
ப: புல்லாகிப் பூண்டாகிப் புழுவாகியதோடு பரிணாம வளர்ச்சி நின்றிருந்தால் இந்த அழிவு எல்லாம் உலகிற்கேது என்று சிந்திப்பதுண்டு.

ஃ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கற்பக விற்பனை நிலையங்களில்

## விற்பனையாகின்றது.

உங்கள் உணவிற்கு சுவை சேர்க்க

# பனம் சிரப்

- சீனிக்குப் பதிலாக உபயோகிக்கக் கூடிய புரதம்.
- இரும்பு, கல்சியம், குளுக்கோஸ், நிறைந்தது.
- தயிர், அப்பம், பாண் போன்ற உணவுகளைச் சுவையூட்டச் சிறந்தது.

## சோடாவிற்குப் பதிலாக பருக

- சுவையூட்டப்பட்ட பனம் கோடியல்.
- சுத்தமான குளிரூட்டப்பட்ட போத்தலில் அடைக்கப்பட்ட பதநீர்.

# பனம் ஜாம்

- பனம் பழத்திலிருந்து தயாரிக்கப்பட்ட சுவையான உணவு

## பனை அபிவிருத்திச் சபை

தேசிய வீடமைப்புச் செயலகம்,

யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 23801

**கற்பகம் விற்பனை நிலையங்கள்:**

- ப, நோ. கூ. ச. கட்டிடம்
  கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
- யாழ். மாநகரசபைக் கட்டிடம்.
  32, பொன்னம்பலம் வீதி, யாழ்ப்பாணம்.
- ★ 224, காலி வீதி, பம்பலப்பிட்டி.
- ★ பொதுச் சந்தைச் சதுக்கம், மட்டக்களப்பு.

வியாபாரிகளுக்கு தகுந்த கழிவு உண்டு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கர்மயோகியாய் வாழ்ந்த செட்டியார்



வீரகேசரிக்கு ''பாணன்'' என்ற புனைபெயரில் நான் அரசியல் கார்ட்டூன் வரைந்து கொண்டிருந்த காலமது. நான் வரைந்த கார்ட்டூனை ஆசிரியர் ஹரனிடம் கொடுத்துவிட்டு அவரது அறையிலிருந்து வெளிவரும்போது தாம் பூலம்தரித்த சிரித்த முகமொன்று நாற்காலியில் பத்மாசனத்தில் இருந்துகொண்டு'' கார்டூனிஸ்ட் அவர்களே! உமக்கு பிரபல கார்ட்டூனிஸ்ட் தானுவைத் தெரியுமா. நான் அவருடைய குரு'' என்றார். ''நீங்கள் தானுவிற்கு கார்ட்டூன் கற்பித்த குருநாதரா'' எனக் கேட்டேன். சிரித்துவிட்டு ''இல்லை நான் யோகாப்பியாசம் கற்றுக்கொடுத்த குரு'' என்று கூறி, தான் சென்னை வை. எம். சி. ஏயிலும் யோகப் பயிற்சி ஆசிரியராக இருந்த வரலாறையும் கூறி முடித்தார்.

எம்மிடையே வீரகேசரி காரியாலயத்தில் ஆரம்பித்த நட்பு, அவர் கடைச்சாமி கோவில் புனருத்தாரணப்பொறுப்பை முடித்து அமெரிக்கா போகும்வரை தொடர்ந்தது.

வீரகேசரியில் செட்டியார் செய்திகளைக் கையாண்ட கச்சிதம் அமெரிக்க தூதரகத்தைக் கவர்ந்தது. அவர் அங்கு அழைக்கப்பட்டுத் தகவல் பொறுப்பதிகாரிப் பதவியும் அவருக்கு வழங்கப்பட்டது. அமெரிக்கரின் நாவில் ''சுப்ரஹ்மண்யன் செட்டியாரென்ற'' நாமம் புரளச் சிரமப்பட்டது. செட்டியாரில் 'ஜெட்'தொனித்ததால் தூதரகத்தினர்கள் செட்டியாரை ''ஜெட்'' என்று செல்லமாக அழைத்தார்கள். அன்றையபொறுப்பை அன்றே நிறைவேற்றும் வீறுகொண்டவராய் இயங்கினூர்.

செட்டியாரில் அரசியல் சாணக்கியமும் இருந்தது.

பிரபல அமெரிக்க அரசியல் ராஜதந்திரி டலஸ் இலங்கை வந்தபோது யாழ்ப்பாண மண்ணிலுள்ள டலஸ் அவர்களின் பூட்டியின் சமாதியை செட்டியார் பலகோணங்களிலும் படம்பிடித்து தயாரித்த அல்பமொன்றை அவருக்கு அன்பளிப்புச் செய்தார்.

''யாழ்ப்பாண - அமெரிக்க உறவினுல் உங்கள் பூட்டிஎமது மண்ணில் அமைதியாக உறங்குகிறுர்'' என்று செட்டியார் சூசகமாகச் சுட்டிக்காட்டியிருக்கிறுர்.

செட்டியாரின் சேவையைப் பாராட்டுமுகமாக தூதரகம் அமெரிக்க சுற்றுலாவொன்றை வழங்கியது. ''எம்பயர் ஸ்டேட்'' கட்டிடத்தின் உச்சிமாடியில் நிற்கும்போது சேரன் செங்குட்டுவன் இமயமலையில் நின்ற வரலாறு ஞாபகம்வந்தது'' எனக்கூறிப் புன்னகை பூத்தார் செட்டியார்.

அகில இலங்கை மல்யுத்தப் போட்டியில் முதல் பரிசைத் தட்டிக்கொண்ட செட்டியார் தன் சாதனையைப்பற்றிப் பிறருக்கு அலட்டிக் கொள்வதில்லை. தண்டால், பஸ்கி, குஸ்தி எல்லாம் தெரிந்தவராயினும் சண்டை பிடிக்கக் கொடுக்குக் கட்டி வருபவரிடம் ஒரு குமிண்சிரிப்பு சிரித்தே அவரைச் சாந்தப்படுத்திவிடுவார்.

தமிழனின் தத்துவச் செறிவையும், கலைச் சிறப்பையும் உலகிற்கு உணர்த்தச் சிவதாண்டவச் சிலைஒன்றே போதுமென்று ஆனந்தக் கண்ணீர் வடிப்பார் செட்டியார். நாட்டியக் கலையில் கொண்ட பற்றினுல் தன் ஒரேஒரு பிரிய மகளாகிய கல்யாணியை, ருக்மணி அருண்டேலிடம் பரதநாட்டியம் கற்க வைத்தார்.

கலாயோகி ஆனந்தக் குமாரசாமி, பொஸ்டன் மியூசியத்திலிருந்து சிவனின் பிரபஞ்ச நடனத்தின் தத்துவத்தை உலகெல்லாம் உணர்த்தியதுபோல, தமது மகள் கல்யாணிமூலம் பரதநாட்டியத்தின் தத்துவத்தை அமெரிக்கர் உள்ளங்களில் நிலைநிறுத்த வேண்டுமென்று விரும்பினுர் செட்டியார்.

அண்மைக் காலத்தில் செட்டியாரைச் சுற்றி ஒரு கூட்டமே திரண்டிருந்தது. கடைச்சாமி கோவிலுக்கு அவர் போகும்போது பக்தர்களும், சிரித்திரன் காரியாலயத்திற்கு வரும்போது எழுத்தாளர்களும் அவரைச் சூழ்ந்து விடுவார்கள். பல சமயங்களின் தத்துவங்களையும் கற்றவராகையால் சமயக் கருத்துக்களைத் தெளிவாக விளக்கும் ஆற்றல் பெற்றிருந்தார் செட்டியார்.

பத்திரிகை உலக அனுபவங்களையெல்லாம் பல்சுவையுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறி எழுத்தாளர்களுக்கு எழுத்தாற்றலைத் தூண்டுவார். வீரகேசரியில் தான் பணிபுரிந்த காலத்தை நினைவு கூரும்போது அங்கு பணிபுரிந்த வாஸ், லோகநாதன், ஆதித்தன் ஆதியோரின் ஆற்றலைக் குறிப்பிடத் தவறமாட்டார்.

''தூதரகப் பணியிலிருந்து இளைப்பாறிய பின்பு எப்படிப் பொழுதுபோக்கப்போகிறீர்கள்'? என்ற கேள்விகளுக்கு அவர் அளித்த பதில் இன்றும் நினைவில் பசுமையாக இருக்கிறது. ''இசை விழாக் காலத்தில் சென்னையிலும்' ''Cherry Blossom'' காலத்தில் யப்பானிலும், ஒலிம்பிக் பந்தய காலத்தில் அங்கேயும் சஞ்சாரம் செய்வேன்'' எனக் கூறினர்.

குபேர சம்பத்து அவருக்குக் கை கொடுத்தபடியால் அவர் கூறியவற்றையெல்லாம் செயல்படுத்தக்கூடியதாக இருந்தது. அண்மையில் அவர் ஒலிம்பிக் விளையாட்டரங்குபோய் Saturday Review பத்திரிகைக்கு எழுதியனுப்பிய செய்தி பலருக்கு ஞாபகமிருக்கலாம்.

அமெரிக்கா பயணம்போன செட்டியார் வாசிக்க கலை, சமையம் தத்துவம் என நூறு புத்தகங்களுக்குமேல் வாங்கினர். அந்தப் புத்தகங்களைத் திறந்து படிக்க கண்திறக்கவிடாது விதி சதி செய்துவிட்டது. மனைவி மக்கள் மருமக்கள்சூழ அவர் அமரரானது அவரின் ஆத்மாவிற்கு சாந்தி அளிக்கும். நாம் எமது மானசீக மலர் வளையங்களால் எமது கண்ணீர்க் காணிக்கையையைச் செலுத்துகின்றோம்.

— சுந்தர்

## பலநாட்டுப் பழமொழிகள்

ஒருவருடைய மதம் மற்றவருக்குப் பைத்தியமாகத் தெரிகிறது.

— இங்கிலாந்து

கடவுள் பாவங்களை மன்னிக்கிருர். இல்லாவிடில் சொர்க்கம் காலியாகவே இருக்கும்.

— ஜெர்மனி

உண்மையை மிதித்தால் அது உடனே வாளாக மாறிவிடும்.

— இங்கிலாந்து

நோய் இல்லை என்று மனதில் உறுதிசெய் மனம்போல் உடல் அமையும்.

— பாரதி

அதிர்ஷ்டசாலிக்குச் சேவல் கூட முட்டையிடும்.

— கிரீஸ்

ஊதாரி வருங்காலப் பிச்சைக்காரன். கஞ்சன் என்றுமே பிச்சைக்காரன்.

— போலந்து

அறிவு தலைவருக்குக் கிரீடம். அடக்கம் காலுக்குச் செருப்பு.

— ஹிப்ரு

அன்பினுல் சிங்கத்தின் மீசையைப் பிடுங்கலாம்.

— அரேபியா

அறிஞரைக் கேட்காதே. அனுபவசாலியைக் கேள்.

— இந்தியா

அறிஞர்கள் ஞானத்தைத் தேடுகிருர்கள். முட்டாள் அதைப் பெற்றுவிட்டதாக நினைக்கிருன்.

— ஜெர்மனி

## கலைவாணரின் குறுநகை

ஹாஸ்யத்தில் மன்னனாகத் திகழ்ந்த கலைவாணர் கிருஷ்ணன் மதுரம் தம்பதிகளின் ஹாஸ்யங்கள் என்றும் நிலைபெற்றவை. சிந்திக்கத் தெரிந்த மனிதனுக்கு சிறந்த ஒரு சிரிப்பு என சிரிப்பு முழக்கம் இட்டார்கள்.

ஒருநாள் இருவரும் காரில் பிரயாணம் செய்துகொண்டிருந்தார்கள். அப்பொழுது கலைவாணர் தனது அடுத்த நாடகத்துக்கு என்ன தலையங்கம் வைக்கலாமென சிந்திக்கையில் கார்ச் சாரதியும் காரை விரைவாக ஓட்டிக்கொண்டிருந்தான். திடீரென கலைவாணரும் சாரதியை நோக்கி, ''என்னப்பா கார் எவ்வளவில் ஓடுது என்றார்'' சாரதி ஒரு ஐம்பது அறுபதில் ஓடுதுங்க என்றார். பார்க்கலாம் உடனே கலைவாணரோ, பிடித்துவிட்டேன், பிடித்து விட்டேன் எனக் கத்தினர். அருகிலிருந்த மதுரமும் என்னுங்க எனக் கேட்க, ''அடியே அடுத்த நாடகத்துக்கு தலையங்கம் பிடித்துவிட்டேன். ஐம்பதும் அறுபதும் என்றார்.

இந்த நாடகம் பிற்பகுதியில் சினிமாப் படத்தில் நல்ல படிப்பினைக் காட்சியாக அமைந்து மகிழ்ந்து இரசித்த இரசிகர்கள் ஏராளம். ஏராளம்.

— இ. நந்தகோபால்

## பள்ளிகொண்டார்

ரியூட்டரி ஆசிரியர்: பாலு ரியூட்டரிக்குத் தூங்குவதற்கா வாறது?

பாலு: மன்னிக்கவேணும் சார்.... நான் இன்று பாடசாலையில் தூங்கவில்லை.



★ இன்று பட்டினத்தார் இருந்தால்?

□ இறைவா 'கட்சி' ஏகப்பனே என்று பாடி முடிப்பார்.

— ஞானி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வித்தக வேந்தே வாழ்க



வளர்ந்தது வயது
விளைந்தது தகைமை
வளமது சொந்த வித்துவத் திறத்தால்
வசந்தம் காண வித்தியும் முகிழ்ந்தான்
தளர்வுகள் போக
தீரங்கள் ஆக
துளிர்ந்தது நாட்டுப் பாடல்
களமது கண்டது கலையது வளர்ந்தது
கலைமகன் வித்தி வாழ்க !

நட்பிலே பிணைத்து
நிறுவிய பாசம்
நாளெல்லாம் நீரென ஓடி
எட்டமென எங்கும் ஏகுவோர் நாடி
எளிமையில்
தோழமை காணும்
எட்டின உறவை
ஏற்றமாய்க் கொண்டு
இலட்சிய நெஞ்சனாய் வாழ்ந்தார்
ஒட்டின நட்பு 'மணிவிழா' கண்டு
ஓங்கின புகழ் உவகை:

தமிழினைக் கற்பதைக்
தீதென மதித்து
தமிழ்படும் கொடுமைகள் கண்டு
தமிழினி மெல்லச் சாகவே யென்று
தூரதேசம்
போகும் போதும்
திமிரெலாம் சோர்ந்த வேங்கை உணர்வில்
தமிழினைப் பருகி தமிழிலே வளர்ந்து
தலைவனான வித்தியே வாழ்க !

பொன். பொன்ராஜா

# சம்பவச் சுவை

வாசக அன்பர்களே!

நீங்களும் உங்கள் வாழ்க்கையில் நிகழ்ந்த சுவையான சம்பவங்களை எழுதி அனுப்புங்கள். முதலாவதாகத் தேர்ந்தெடுத்து பிரசுரிக்கப்படும் ''சுவையான சம்பவத்திற்குப் 10 ரூபா பரிசு வழங்கப்படும்.

— ஆசிரியர்.

அனுப்ப வேண்டிய முகவரி:
சம்பவச்சுவை
சிரித்திரன்
550, கே. கே. எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

# மூன்றும் வகுப்புப் பிரயாணம்

லண்டனால் கொழும்பு வந்து சேர்ந்த தம்பியை யாழ்ப்பாணம் அழைத்துவர அவருடைய அண்ணா கொழும்பு போயிருந்தார். தம்பியுடன் கோட்டை ரயில் ஸ்டேஷன் வந்து இரு மூன்றும் கிளாஸ் ரயில் டிக்கட் பெற்றுக்கொண்டார் அண்ணா. இதை இதைப் பார்த்த தம்பி ''ஏனண்ணா மூன்றும் கிளாஸ் டிக்கட் வாங்கினீர்கள். முதலாம் கிளாஸ் டிக்கட் வாங்கியிருக்கலாமே'' என்றார்.

அதற்கு அவர் அண்ணா ''காந்தி அடிகள் மூன்றும் கிளாஸ் கொம்பாட்மென்டில்தான் பிரயாணம் செய்தார். மூன்றும் கிளாஸ்ஸிற்கு காந்திக் கிளாஸ் என்ற கௌரவமும் உண்டு''. என்றார்.

இதற்கு அவர் தம்பி கல கல வெனச் சிரித்துவிட்டு ''அண்ணா... இதில்தான் நீங்கள் பிழை விடுகிறீர்கள். காந்தி, பிரயாணிகள் நிறைந்த மூன்றும் கிளாஸில் ஏறினால் பிரயாணிகள் இருக்கையை விட்டு எழுந்து அவருக்கு இடம் கொடுத்து தாங்கள் வேறு இடம் போயிடுவார்கள். நீங்கள் மூன்றும் கிளாஸ் ஏறினால் இடமில்லையென்று உங்களை வெளியில் தள்ளி விழுத்தி விடுவார்களல்லவா'' என்றார்.

அண்ணாவோ அசடுவழிய ஹி ஹி என்று சிரித்தார்.

— அ. ஜனகன்

சேர்ந்து நிற்பது — ஓர் ஆரம்பம்
சேர்ந்து வாழ்வது — முன்னேற்றம்
சேர்ந்து உழைப்பது — வெற்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாரசிகர்களுக்கு

ஓர் ரசமான செய்தி!

அம்பாள் வீடியே ஓடியோ சென்ரர்

செய்யும் கலைப்பணிகள்

- தமிழ், ஆங்கிலம், இந்தி வீடியோ படங்களை டி. வி. வீடியோ டெக் முதலியவற்றை வாடகைக்கு பெற்றிடவும், படங்களை றெக் கோடிங் செய்து கொள்ளவும்.
- மங்களகரமான வைபவங்களை வீடியோபடம் பிடித்துக்கொள்ளவும்...
- தமிழ், ஆங்கிலம் சிங்கள, ஹிந்தி பாடல்களைப் பதிவு, செய்யவும், பதிவு செய்யப்பட்ட கசெற்றுகளை மாற்றவும்...
- படங்களையும் பாடல்களையும் (ஒலியும் ஒளியும்) றெக்கோடிங் செய்து கொள்ள... தொடர்பு

கொள்ளவும் அம்பாள் வீடியோ அன் ஓடியோ சென்றர்.

இன்றே விஜயம் செய்யுங்கள்.

**அம்பாள்**
**வீடியோ ஓடியோ**
**சென்றர்**

894, கே. கே. எஸ். றோட்,
யாழ்ப்பாணம்.

உரிமையாளர் பொ. இராமன்



பதிவு இசைக்கு

றேடியோஸ்பதி

- பரவசமூட்டும் பக்திப் பாடல்கள்
- தித்திப்பான திரை இசைப்பாடல்கள்
- கர்நாடக மேதைகளின் கர்ணாமிர்த
- தனித்தேன் பாடல்கள்.

அத்தனை அமுத வெள்ளத்தையும் அள்ளிப் பருக

வருக வருக றேடியோஸ்பதி பதிவு நிலயத்திற்கு.

*அனைத்தையும் நவீன எலெக்ரோனிக் கருவிகள் மூலம் துல்லியமாக ஒலிப்பதிவு செய்து தருவதிலும் றேடியோ ரேப் ரெக்கோடர்கள் - தொலைக் காட்சிப் பெட்டிகள் அனைத்தையும் திருத்தம் செய்வதிலும், விற்பனை செய்வதிலும் முன்னிலையில் திகழ்பவர்கள்.*

**றேடியோஸ்பதி**

**கஸ்தூரியார் வீதி,**

**யாழ்ப்பாணம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதை அமுதம்

வடகோவை வரதராஜன்

# தாய்ப்பறவையும் சேய்ப்பறவையும்

'க்—— ருவிக் —— க்ருவிக்' — புஸ்தகம் படித்துக் கொண்டிருந்த ராஜன் இந்தச் சத்தத்தால் சட்டென நிமிர்ந்து பாத்தான்.

'எங்கோ ஓர் மைனு கத்துகிறது'

இவற்றில் எல்லாம் ராஜன் அதி திறமைசாலி. குரலை வைத்துக் கொண்டு இது எந்தப் பறவை எதற்காக கத்துகிறது என்பதை அவனால் கூறிவிட முடியும். சாதாரணமாக காகம் கரைவதைத் தான் நாம் அறிவோம். ஆனால் காகம் கரைவதிலேயே பலவகையான தொனி வித்தியாசம் இருக்கிறது !என்பதைக் கூறி அவன் விளக்கும் போது நாம் பிரமித்து விடுவோம். உணவைக் கண்டதும் தன் இனத்தைக் கூட்ட ஒரு வகையான கத்தல்!

தன் இனத்தின் இழவு வீட்டைக் கொண்டாட ஓர் கலவரப்பட்ட கத்தல்!.

விருந்தினர் வரவைக் கட்டியம் கூற இன்னோர் வகையான தொனி!.

மகிழ்ச்சியான நேரங்களில் பாடுவதற்கு வேறோர் தொனி (காகம் கூடப் பாடுமாம். ஆனால் நாம் தான் அதைக் கவனிப்பதில்லையாம் அப்படித் தான் ராஜன் கூறுகிறன்)

எதிரிகளைக் கண்டு தன் இனத்தை எச்சரிக்க இன்னோர் தொனி!

இவற்றை எல்லாம் ராஜன் தன் நுட்ப்பமான அவதானிப்புகளால் அறிந்து வைத்திருக்கிறன்.

பறவை விலங்குகளைப் பற்றி அவனது நனவுகள் அளப்பரியன. பறவை விலங்கினங்களில் அவன் காட்டும் ஆர்வமும் அக்கறையும் இவ்வளவு என மட்டுக்கட்ட முடியாது.

பறவை விலங்கினங்களைப் பற்றி அவனிடம் கதைத்துப் பார்க்க வேண்டும்; தன்னை மறந்த நிலையில் மிகவும் பரவசமாக அவைகளின் நுணுக்கமான செய் முறைகள் ஒவ்வொன்றையும் அழகாகக் கூறுவான்.

தான் அவதானித்த இந்த நுட்பங்கள் பற்றி பிரபல பத்திரிகைகளில் கட்டுரை கூட எழுதி இருக்கிறன்:

ஓர் அணில் சப்திக்கும் சத்தத்தை வைத்து குட்டி அணிலா? பெரிய அணிலா? எதிரிகளினல் கலவரமுற்றுக் கத்துகிறதா? துணையை அழைத்துக் கத்துகிறதா என்பதைப் பற்றி கூறக் கூடிய திறமை அவனுக்கிருந்தது? பறவை விலங்குகளின் சிறிய செயற் பாடுகளையும் நுட்பங்களையும் கவனிப்பதில் ஒரு வனவேடனின் திறமையும் நுட்பமும் அவனுக்கிருந்தன.

இவனுடைய கலாசாலை நண்பன் சத்தியமூர்த்தி; தனது வேட்டை அனுபவங்களையும்; காட்டு வாழ்க்கைகளையும் அழகாகக் கூறும் போது வாயில் நீரொழுகக் கேட்பான்.

இந்த வகையில் தான் ஒரு வேடுவனுக காட்டில் பிறக்கவில்லையே என்று பல முறை வருந்துவதுண்டு.

காட்டில் பிறந்திருந்தால் எத்தனை விதமான உயிரினங்களைச் சந்தித்திருக்கலாம் என அவன் கற்பனை செய்வதுண்டு.

என்ன வேலையாக இருந்தாலும் நிசப்தத்தைக் கலைக்கும் ஓர் 'புதிய பிராணியின் குரல் கேட்டால் அக்குரல் வந்த திக்கில் அந்தப் பறவையையோ விலங்கையோ பார்த்து விட்டுத் தான் மறுகாரியம்.

இது அவன் இரத்தத்தில் கலந்த குணம்!

எந்தெந்தப் பறவை எந்தெந்த மாதத்தில் முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும்— எந்தெந்தப் பறவை எந்தெந்த உணவை உட்கொள்ளும், என்பதை எல்லாம் அவனின் டையரியைப் பார்த்து அறிந்து கொர்ள்ளலாம்.

'க் ---ருவிக் ---க்ருவிக்'

இந்த மைனு எங்கிருந்து கத்துகிறது ராஜன் புஸ்தகத்தை மூடிவிட்டு கதிரையில் இருந்த படியே பார்வையை வெளியே ஓட்டினன்.

'ஓகோ---போஸ்றிலே மைனு கூடு கட்டப் போகுதோ?'

முன் வளவில் இருந்த பனைமரத்தாலான லைற் போஸ்றில் இரு



இன்று இருக்கும் அணுக்குண்டுகள் இப்போது இருக்கும் உலகைப் போன்று ஆயிரம் மடங்கு உலகினை அழிக்கும் இனித்தயாரிக்கும் குண்டுகள் யாரை அழிப்பதற்கு?

—அம்பலம் —



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ந்த மைனா ஒன்றின் செய்கை அவனைப் பரவசப் படுத்தியது. சுள்ளியொன்றைத் தன் மஞ்சள் அலகில் ஏந்திக் கொண்டு அந்த மைனாப் புள் கூச்சலிட்டது.

'ஏன் இப்படிக் கூச்சலிடுகிறது'
'ஓணானைக் கண்டிட்டுக்கத்துதோ'

இதற்கு முன் அந்தப் பனை மரப் போஸ்ரில் உள்ள பொந்தில் கிளியொன்று குஞ்சு பொரித்திருந்தது. கிளிக்குஞ்சு இறக்கை முளைத்துப் பறந்து சென்ற பின் அப் பொந்தை ஓணான் ஒன்று தன் வசமாக்கிக் கொண்டது. அந்த ஓணான் தான் இப்போ மைனாவுடன் சண்டித்தனம் பண்ணுகிறது போலும்.

அந்த அசிங்கம் பிடித்த ஓணானைக் கலைப்பதற்கு ராஜனும் எத்தனையோ நாட்கள் முயற்சி பண்ணிப் பார்த்திருக்கிறான்.

ம்---கூம் அதுவும் அந்தப் பொந்தை விட்டு அசைந்த பாடில்லை. பகல் வேளைகளில் பொந்தின் வாசலில் இருந்து தலையைத் தலையை ஆட்டிக்கொண்டிருக்கும். ஏதேனும் பூச்சிகள் அருகாமையில் பறந்து வந்தால் லபக்.

ஏன் சில சமயங்களில் பூச்சிகள் கீழே—நிலத்தில் ஓடுவதைக் கண்டாலும் போஸ்ரில் இருந்து சர சர எனக் கீழிறங்கி வந்து 'லபக்' எனப் பிடித்து விழுங்கி விட்டு மீண்டும் மரத்தில் ஏறிக் கொள்ளும்.

சே--- இந்த ஓணான் இருக்கும் நேரத்தில் ஏதாவது ஓர் குருவி இப்பொந்தில் முட்டையிட்டுக் குஞ்சு பொரித்திருந்தால் குஞ்சுகளின் 'கிலு கிலு' சத்தத்தையும்; தாய்க் குருவி அடிக்கொருதடவை உணவூட்டும் அழகையும் மணிக் கணக்காக இருந்து பார்க்கலாமே!

இந்த ஓணான்—கேவலம் பிடித்த இந்த கரட்டி ஓணான் → ஓர் பறவையின் இருப்பிடத்தைப் பாழ்படுத்துகிறதே என்ற மனக்கொதிப்பில் ராஜன் சில கற்களைப் பொறுக்கி அவ்வோணான்மீது வீசியிருக்கிறான்.

ஒன்றாவது பட்டால்தானே !

தப்பித்தவறி கல் மரத்தில் பட்டுவிட்டால் உண்டான அதிர்வைக் கிரகித்துக்கொண்ட ஓணான் சர சரவெனப் பொந்து வாசல்வரை ஏறிவிடும். பின் வாசலில் இருந்துகொண்டு 'பண்ணிப்பார்' என்னுமாப்போல் ஓர் முறை திரும்பிப் பார்த்துவிட்டு பொந்தினுள் புகுந்துகொள்ளும்.

அந்த ஓணானுக்கும் மைனாவுக்கும்தான் புகைச்சல் கண்டிருக்கிறது. மைனா தான் கொண்டு வந்த சுள்ளியைப் போட்டுவிட்டுப் பறந்து பறந்து அவலக் குரலில் கத்தியது. சிறிது நேரத்தில் அதன் துணையும் வந்து சேர்ந்தது. இரண்டுமாகச் சேர்ந்து கத்திக் கத்திப் பறந்தன. இத்தனைக்கும் அந்த அசிங்கப்பிராணி தான் இருந்த இடத்திலேயே அசையாமல் இருந்தது.

துணிவு பெற்ற மைனாப்புள் ஒன்று திடீரெனப் பறந்து வந்து சற்றும் எதிர் பாராதவாறு தன் அலகால் ஓணான் மீது ஒரு போடு போட்டது.
மைனாவின் தாக்குதலால் திடுக்குற்றுச் சிலிர்ப்படைந்த ஓணான் திரும்பித் தன் சிவந்த வாயால் மைனாவைக் கடிக்க முயன்றது.

துணைக்கு மற்றைய மைனாவும் சேர்ந்து கொண்டது. இரண்டும் தம் அலகுகளால் கொத்தியும் சிறகுகளால் அடித்தும், நகங்களால் கீறியும் ஓணானை வதைத்தன. இவ்வளவு நேரமும் எதிர்த்து நின்ற ஓணான் மைனாப் பட்சிகளின் கூட்டுத் தாக்குதலுக்கு ஈடு கொடுக்க முடியாமல் இறங்கி ஓடியது.

ஓடோட மைனாக்கள் விட்டுக் கலைத்தன கொத்திக் காயப் படுத்தின. இனிச் சீவிய காலத்தில் இந்தப் பொந்தை நினைத்துப் பார்க்காத அளவிற்கு கலைத்தன. ஓணான் ஓடி ஓர் பற்றையில் புகுந்து மறைந்ததும் மைனாக்கள் மீண்டும் சுள்ளிகளைப் பொறுக்கி கூடு அமைக்கத் தொடங்கின.

ராஜனுக்கு படு உற்சாகம் பிறந்து விட்டது. படித்துக் கொண்டிருந்த புஸ்தகத்தைத் தூக்கி மேசையில் பொத்தெனப் போட்டான்.

ஜெயகாந்தன் என்ன; ர.சு. நல்லபெருமாள் என்ன, இந்திரா பார்த்தசாரதி என்ன— ஏன் மர்க்சிம் கோர்க்கி கூடத்தான்

## ஆயுள் பலன்

விஞ்ஞானி:
அணுக்குண்டால் உலகம் அழிந்து விடும் என்று நினைத்து எமது ஆயுள் குறைந்து கொண்டே போகிறது.

தத்துவஞானி:
கவலையடையாதீர். அந்தப் பலன் இனி அணுகுண்டிற்க்கு கிடையாது. போதைப் பொருள் அந்த இடத்தைப் பிடித்து விட்டது.



—அம்பலம்—



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

—இனி யாருமே அவனுக்கு வேண்டியதில்லை. இந்தக் கதிரையில் இப்படியே உட்காந்தபடி —கால்களைத் தூக்கி கதிரைச் சட்டங்களில் போட்டுக்கொண்டு அந்த மைனாப் புட்களை ரசிப்பது தான் அவனிற்கு பொழுது போக்கு.

மைனாக்கள் எதுவித தடையுமின்றி நாள்தோறும் சிறு சிறு சுள்ளிகளைக் கொண்டு வந்து அந்தக் கூட்டைக் கட்டி முடித்தன.

இத்தனைக்கும் ராஜன் கருந்தவிட்டு நிறத்தையுடைய அந்த மைனாப் புட்களின் ஒவ்வோர் அசைவையும் அவற்றின் மஞ்சள் நிறச் சொண்டையும்; மஞ்சள் மென் சவ்வு சூள்ந்த கண்ணை பறக்கும் போது இறகின் அடிப் பாகத்தில் தெரியும் வெள்ளை மறையை— மஞ்சல் நிறக் கால்களை— பார்த்துப் பார்த்து ரசித்து வந்தான்.

'இப்போ மைனா முட்டை போட்டிருக்கும்! ஒருக்கா போஸ்ரிலை ஏறிப் பார்த்தா என்ன? — ஒரு கணம் அவன் மனதில் இவ்வாறான எண்ணம் தோன்றியது.

புளுப் பொறுக்கிக் குருவி நிலத்தில் உள்ள புளுவை வெடுக்கெனக் கொத்தி இழுப்பது போல் உடனே அவ் வெண்ணத்தை மனதில் இருந்து பிடுங்கி எறிந்தான்.

இது விடயத்தில் பல முறை அவன் அனுபவப்பட்டவன்.

மைனா, மணிப்புறு போன்ற பறவையினங்கள், கூட்டைக் கட்டும் போது வேறு தொந்தரவுகள் ஏற்பட்டால் கட்டிய கூட்டை அப்படியே விட்டு விட்டு அப்படியே வேறு இடம் போய் விடும் என்பதை அவன் அறிவான்.

மேலும் முட்டையிட்ட பின்பு— குஞ்சு பொரிக்கும் முன்பு அம்முட்டை இருக்கும் இடத்திற்கு மனிதர்கள் அடிக்கடி சென்றால் கரவு கொண்ட தாய்ப் பறவை தன் முட்டைகளைத் தானே உடைத்து விடக் கூட துணிந்து விடும் என்பதை அவன் அனுபவத்தில் அறிந்திருந்தான்.

இப்படித் தான் முன்பு ஒரு முறை வயல் வெளியில், பூவரச மரமொன்றில் மணிப்புறு ! கூடு கட்டி முட்டையிட்டு இருப்பதைக் கண்டு விட்டு தினமும் சென்று ஆவலுடன் அதைப் பார்த்து வந்தான். மூன்றாம் நாள் போய்ப் பார்க்கும்போது கரவுகொண்ட தாய்ப்பறவை அவன் கண்ணெதிரேயே தன் இரு முட்டைகளையும் அலகால் கொத்தி உடைத்துவிட்டு பறந்து சென்றதை மிகுந்த அதிர்ச்சியுடனும் துயரத்துடனும் அவன் பார்த்திருக்கிறான்.

எனவேதான் இவ்விபரீத எண்ணத்தைத் தூக்கி எறிந்து விட்டு மனந்திறந்து மனதிற்கு அணைபோட்டான்.


இருந்தாற்போல் ஒருநாள் போஸ்ரில் இருந்து சிறு முணு முணுப்புச் சத்தம் கேட்டது.

'குஞ்சு பொரித்துவிட்டது!' ராஜனின் நெஞ்சத்தில் காய்த்துக் குலுங்கும் பயிற்றஞ் செடியைக் கண்ட கிளியைப்போல மகிழ்ச்சி குமிழியிட்டது.

என்னமும் எண்ணி பதினைந்து நாட்கள். பதினைந்து நாட்களின் பின்; இப்போது தூவிகூடமுளைக் காத மைனாக் குஞ்சு பிடித்து வளர்க்கக் கூடிய பருவத்திற்கு வந்துவிடும்.

ராஜன் விருந்தைக் கதிரையில் அமர்ந்து அடிக்கொருதடவை குஞ்சுகட்கு தாய்ப்பறவை உணவூட்டும் காட்சியைப் பார்த்துப் பார்த்து பரவசமடைவான்.

அலுப்புச் சலிப்பில்லாமல், நாள் முழுவதும் — நிமிடத்துக் கொருதரம்; அந்தப் பெற்றோர்ப்



☐ உன் மகளை ஒருவர் 'லவ் பண்ணித் திரிந்தாரே...... அவர் எங்கே?

● அவர் ''லவ்''கீக வாழ்க்கையைத் துறந்து சன்னியாசியாகப் போய் விட்டார்.

அதிமதுரம்

பறவைகள் இரண்டும் மாறிமாறி குஞ்சுகட்கு பூச்சி புழுக்களைக் கொண்டு வந்து ஊட்டின.

எவ்வளவுதான் ஊட்டினாலும் அந்தக் குஞ்சுகள் 'இன்னம் இன்னம்' என்று உணவிற்கு ஆவல் பட்டு பெற்றோர்ப் பறவை வந்து பொந்து வாசலில் அமர்ந்தது தான் தாமதம் ஒன்றுடன் ஒன்று போட்டிபோட்டு, அவா மிகுதியால் சிலுசிலு எனச் சத்தம் எழுப்பி; இரையை அவசரம் அவசரமாக விழுங்கும் காட்சி உண்மையிலேயே ஓர் அலுக்காத அனுபவம்தான்!

தாய்ப்பறவை கொண்டுவந்து தரும்உணவை விரைவில் விழுங்கி விடுவதற்காக குஞ்சுகளின் வாய்ப் பகுதி ஓர் மஞ்சள் நிறமான மென் சவ்வினால் மேலும் பெரிதாக்கப்பட்டுள்ளதை ராஜன் பல பறவைகளில் அவதானித்திருக்கிறான். இதைப்பற்றி ஓர் கட்டுரை கூட எழுதி இருக்கிறான்.

மைனாக்கள் பெரும்பாலும் தம் குஞ்சுகட்கு வெட்டுக்கிளியையே வேட்டையாடிக்கொண்டு வந்து கொடுப்பதை அவன் பல முறை அவதானித்திருக்கிறான். ஆனால் இப்போ ஓர் புதுஅவதானத்தையும் பெற்றுக் கொண்டான். போஸ்ரரில் குஞ்சுபொரித்திருக்கும் மைனாப்புள் தன் குஞ்சுகட்கு நன்கு கனிந்த பொன்நிற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மான வேப்பம் பழங்களை இடை இடையே ஊட்டுவதை அவன் அவதானித்தான். உடனேயே இதைப்பற்றி தனது டயறியிலும் குறித்துக்கொண்டான்.

எந்தப் பழவர்க்கத்தையுமே தன் குஞ்சுகட்கு ஊட்டாத மைனுப் புள் வேப்பம் பழங்களை மட்டும் தான் தன் குஞ்சுகட்கு ஊட்டுவதேன்?

வேப்பம் பழத்தை ஊட்டுவதன்மூலம் குஞ்சுகட்கு நோய் எதிர் சக்தியை ஏற்படுவதற்கு தாய்ப்பறவை இந்த மருத்துவ முறையைக் கையாழ்கிறதோ?

இதுமட்டும் உண்மையாய் இருந்தால் அந்த ஐந்தறிவு ஜீவனின் மதிநுட்பம் போற்றுதற்குரியது என எண்ணி வியந்தான்.

கலண்டரின் காகிதத்தாள்கள் ஒவ்வொன்முக அகன்றன.

'இண்டையோட பதினைஞ்சு நாளாய்ப்போய்ச்சு! இனியும் பிடிக்காமல் விட்டால் சில வேளை குஞ்சு பறந்திடும். இனி எப்படி எண்டாலும் குஞ்சைப் பிடிச்சுப்போட வேணும்! — இந்தப் பறவை விலங்கினங்களை வளர்ப்பதில் ராஜனுக்கிருக்கும் ஆர்வம் இவ்வளவு என மட்டுக் கட்டமுடியாது.

வசியும் வாய்ப்பும் வரும் போது தன்வீட்டில் ஓர் சின்ன மிருகக்காட்சிச்சாலையே அமைக்க வேண்டும் என்பது அவனது நெடுநாளைய கனவு. அந்தக் கனவின் விட்ட குறை தொட்டகுறை தான் இந்த மைனுப் பைத்தியம்.

மைனுவைப் பிடித்துக் கூண்டில் அடைத்தால் அம்மா சும்மா தொணதொணத்துக் கொண்டிருப்பா. அப்பா ''திறந்து விடு திறந்துவிடு'' என்று நச்சரித்துக் கொண்டிருப்பார்.

'ஒருத்தருக்கும் தெரியாமல் என்ரை அறேக்கை கூட்டைத் தொங்க விடவேணும்.

அம்மா நாளைக்கு கேணியா ஒப்பறேசனுக்கா ஆஸ்பத்திரிக்குப் போரு அதாலை அவவின்ரை தொணதொணப்பு இருக்காது.

■ நல்ல குணமான மாப்பிள்ளை ஏன் வேண்டாமென்ற நீ.

● அவரிடம் அடையாள அட்டையில்லையாம்.



ஆறு அப்பா?

அப்பா இப்போதைக்கு வேலைக்குப் போகமாட்டார். அம்மாவின் ஒப்பிரேசன் முடியு மட்டும் லீவில் நிற்பார். அவர் போகுமட்டும் பார்த்துக் கொண்டிருந்தால் குஞ்சு பறந்துவிடும்.

அப்பாவைத்தான் ஒரு வழியாகச் சமாளிக்க வேணும்.

நாளை இண்டைக்கு அம்மா ஆஸ்பத்திரிக்குப் போனப்பிறகு குஞ்சைப் பிடித்துப்போட வேணும்! — ராஜன் ஓர் சிறுவனுக்குரிய ஆர்வத்துடன் எண்ணமிட்டான்.

அம்மா ஆஸ்பத்திரிக்குப் போட்டா. இண்டைக்கு மத்தியானம் எப்பிடி எண்டாலும் பிடிச்சுப்போடவேணும்.

'என்னெண்டு போஸ்ரிலை ஏறுவது?

'விதானைமாமா வீட்டு ஏணி வைச்சுத்தான் ஏறவேணும்'

'விதானமாமா வீட்டிற்கு ஏணி எடுப்பதற்குச் சென்ருல் விதான மாமி ஒரு 'லோயர்' மாதிரி. அவ போடும் 'குறௌஸ்' எக்ஸ்சாமில்' எந்தப் பொய்யாய் இருந்தாலும் உடைபட்டுக்கொண்டு வெளியே வந்துவிடும். மைனு பிடிக்க என்று உண்மையைச் சொன்னல்,

உனக்கிந்தப் பைத்தியம் இன்னும் போகேல்லையே' என்று நக்கல் அடிப்பா. எனவே ராஜன் 'கதியால் வெட்டப்போறன் அதுதான் ஏணி வேணும்' என்று புளுகினன்.

சரமாரியாக வந்து விளுந்த குறுக்குக் கேள்விகட்கு எல்லாம் சரமாரியாக பதிலிறுத்தான்.

ருவளியாக ஏணி கிடைத்து விட்டது.

'அப்பாடா ஒரு கண்டம் தாண்டியாய்விட்டது; இனி அடுத்த கண்டம் அப்பா'

அவன் ஏணியுடன் வரும் போது அப்பா கேற்வாசலில் நின்று வினேதமாய் பார்த்தார்.

''ஏன் என்ருர்''

''கதியால் வெட்டப் போறன்'' அவருக்கு புளுகினன்.

''இப்ப ஏன் வெட்டிருய்?''

'முருக்கம் கதியால் எல்லாம் முத்திப் போச்சு காத்திலை ஆடி வேலியைப் பாறப் பண்ணப் போகுது அதுதான் வெட்டி வைக்கப் போறன்'

அப்பா வழி விட்டார்.

ஏணியை கொண்டு வந்து சுவருடன் சாத்தினன். மத்தியானம் சாப்பிட்டு விட்டு அப்பா ஓர் தூக்கம் போடுவார். அப்போது பார்த்துக் கொள்ளலாம்.

மதியம் மணி மூன்று!

அப்பா கட்டிலில் கொர்ரிட்டுக் கொண்டிருந்தார்.

ராஜன் ஏணியை எடுத்துச் சென்று போஸ்டரில் சாத்தி விட்டு ஏறினன். பொந்தினுள் கையை விட்டான்.

பொந்து சிறிதாக இருந்ததால் கை நுளைய மறுத்தது.

கீழே இறங்கி கத்தியுன் மீண்டும் மேலேறி கத்தியால் கொத்தி பொந்தின் துவாரத்தை ப் பெருப்பித்தான்.

இந்த நேரம் பார்த்தா கண்மணியக்காவும் அவ்வையக்காவும் வரவேண்டும்!

''உதேன் தம்பி வெட்டு தீர்'' கண்மணியக்கா உண்மையிலே விகற்பமில்லாமல் கேட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டா. அது ராஜனுக்கு எரிச்சலை உண்டு பண்ணியது.

'இவையளுக்கு ஏன் இதெல்லாம். ஒழுங்கையால் போறதெண்டால் பேசாமல் போகட்டன் மற்றவையள் செய்யிற ஒவ்வொன்றுக்கும் காரண காரியம் இவையளுக்கு என்னத்துக்கு இந்த கோப்பாச் சனங்களே இப்பிடித் தான்'

—அவன் மனதிற்குள் புளுங்கினுன்.

கிராமத்திற்கே உரிய அப்பாவித்தனமான வெளிப்படையான கதைகள் அவன் அறியாததல்ல. ஆனுலும் தன் செய்கையை எண்ணி இவர்கள் சிரிக்கப் போகிருர்களே என்ற நினைப்பு இவனுக்கு எரிச்சலைத் தோற்றுவித்தது;

"ஏன் வரதன்" —அவ்வையக்கா;

"மைனுப் பிடிக்கப் போறன்" — ராஜன்.

வெள்ளி மணி அறுந்து சிதறினற் போல் அவ்வையக்கா சிரித்தா.

"ராஜனுக்கு என்னும் குழந்தைப்பிள்ளைப் புத்தி போகேல்லை' —சிரித்தபடி அவர்கள் நடந்தார்கள்.

'போனுக் காணும்'—ராஜன்; அவர்கள் போன திசையைப் பார்த்து மெய்யாகவே ஓர் கும்பிடு போட்டான்.

கத்தியால் துவாரத்தை பெரிதாக்கி பொந்தினுள் கையை விட்டு அங்கு பயத்தால் ஒடுங்கிக் கொண்டிருந்த மைனுக் குஞ்சை காலில் மெதுவாகப் பிடித்து தான் கொண்டு வந்த காகிதப் பையில் போட்டுக் கொண்டு தாமதியாமல் இறங்கினுன். (ஆரும் பார்த்து விடுவார்களே)

இதற்கிடையில் தாய் மைனு வந்து விட்டது. அது அவலக் குரலில் கிறீச --- கிறீச் --- எனக் கத்தியவாறே பறந்து பறந்து திரிந்தது' ராஜனின் தலையைச் சுற்றி கிறீச் கிறீச் எனக் கத்தியவாறு பறந்தது.



பொலிஸ்: அடையாள அட்டைக்கும் உன் முகத்திற்கும் வித்தியாசம் இருக்கிறதே,

ஒருவர்: பல் செட்டை வீட்டில் விட்டிட்டு வந்திட்டேன் அது தான் அந்த வித்தியாசம்.

ராஜன் ஏணியை எடுத்து உள்ளே வைத்து விட்டு; தன் ஒதுக்குப்புற அறையினுள் நுழைந்து கதவைப் பூட்டினுன். மைனுக் குஞ்சைப் பையில் இருந்து எடுத்து மேசையில் விட்டான்.

இறகுகள் பூரண வளர்ச்சி பெற அந்தக் குஞ்சு தத்தித் தத்தி ஓடியது.

'மேசையில் வெள்ளையாகப் பீச்சியது'

ராஜன் அதைக் கையில் எடுத்து ஆசையோடு தடவிக் கொடுத்தான்.

அதன் உடலில் அனேக பேன்கள் ஓடித்திரிந்தன.

இவ்வளவு காலமும் பொந்தினுள்; இருட்டில் இருந்த்தால் பேன்கள் பல்கிப் பெருகி இருந்தன. இனி வெய்யில் பட எல்லாம் இறந்து விடும்.

ஆசையோடு அக் குஞ்சின் இறக்கைகள் ஒவ்வொன்றையும் தடவிக் கொடுத்தான். பின் அதைக் கூட்டில் அடைத்துவிட்டு வெட்டுக்கிளி வேட்டைக்கு புறப்பட்டான்.

தத்திப் பாயும் வெட்டுக்கிளிகளைப் பூப்பாளையால் அடித்து வீழ்த்தி அதைக் கொண்டு வந்து மைனுவிற்கு தீத்தினுன். வீட்டின் மூலை முடுக்கெல்லாம் தடவி கரப்பான் பூச்சிகளை பிடித்து வந்து தீத்தினுன்.

மைனுவுக்கு வலிப்பு வராமல் இருக்க ஒரு துண்டு வசம்பை அதற்கு தீத்தினுன். இன்னுேர் துண்டை அதன் காலிலும் கட்டி வைத்தான்.

பழவகைகளைக் கொடுத்தால் மைனுவிற்கு வயிற்றுப் போக்கும் வலிப்பும் வரும் என்பதை அனுபவ ரீதியாக உணர்ந்த அவன் பூச்சி புளுக்களை மட்டும் ஊட்டினுன். எருக் கிடவை கிண்டி குறவணன் புளுக்களைப் பொறுக்கி வந்து ஊட்டினுன். இப்போ புதிதாக அறிந்து கொண்ட அனுபவத்தை ஒட்டி இடைக் கிடையே சில வேப்பம் பழங்களை ஊட்டினுன்.

தாய்ப் பறவை இன்னமும் அவலக் குரலில் கத்திக் கொண்டே இருந்தது.

அடுத்த நாள் அப்பா ஏதோ அலுவலாய் ராஜனின் அறையில் நுழைந்தவர் கூட்டிலிருந்த மைனுவைக் கண்டு விட்டார்.

'கெட்டது காரியம்!'

"தம்பி ---- தம்பீ ----" பெரிதாகக் கூப்பிட்டார்.

"என்னப்பா"

"இதென்ன கூட்டிலை"

அவன் மௌனத்துடன் நிலத்தைப் பார்த்து புன்னகைத்தான்.

"இதுக்கே நேற்று ஏணி எடுத்தனி" —குட்டு அம்பலமாகி விட்டது' பிடரியைக் கை சொறிய புன்னகையுடன் கூடிய மௌனம்.

"உனக்கேன் இவ்வளவு வயது வந்தும் இந்தக் குணம். குழந்தைப் பிள்ளையளைப் போல இதைப்பிடிச்சு அடைச்சு வைச்சு கறுமம் தேடுறியே துறந்துவிடு! துறந்துவிடு!"

"ஓ"

"என்ன ஓ"

"துறந்து விடுறன்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''எப்பி?''

''எப்பன் வளரட்டும். இப்ப துறந்து விட்டால் காகம் கொத்திப் போகும்''

வெளியே தாய்ப் பறவையும் தந்தைப் பறவையும் இன்னமும் தம் குஞ்சைக் காணுமல் பதறித் தவித்தன. கத்திக் குளறின. கூட்டைச் சுற்றிச் சுற்றி வந்து கத்தின. பின் தென்னேலையில் போயிருந்து கத்தின. திரும்பவும் வெறுமையான கூட்டைக் கண்டு ஏமாற்றத்துடன் கத்தின.

இதை அப்பா கவனித்தார்.

''தம்பி - - - -! இஞ்சை வந்து இந்த தாய் மைனு படுகிற பாட்டைப் பார் ராசா அதைத் திறந்துவிடப்பன்''

அவன் பேசாமல் நின்ருன்:

''இந்தத் தாய் மைனுவின் பரிதாபம் உனக்கு தெரியேல்லேயே. குஞ்சைப் பறி கொடுத்திட்டு அது படுகிற பாட்டைப் பார்ராசா. அதை திறந்து விடு''

'' - - - - -''

''நாளேக்கு அம்மாவுக்கு ஒப்பிறேசன் எல்லே இந்த நேரத்திலே இப்பிடி யொரு பாவத்தை செய்யாதே. அதைத் திறந்து விடு''

திடீர் என ஆயிரம் கிலோவற் மின்சாரம் ராஜனின் மூளேக்குள் பாய்ந்து பொறி கிளப்பியது.

'நாளேக்கு அம்மாக்கு ஒப்பிறேசன்!' 'நாளேக்கு அம்மாக்கு ஒப்பிறேசன்!'

இந்த மைனு தன்ரை குஞ்சைப் பறிகொடுத்திட்டு கத்திறது போலே நாளேக்கு நான் அம்மாவை - - -

''ஓ மை கோட்'' அந்த நினைவையே தாங்கமாட்டாது சிலிர்த்தான் ராஜன்.

'கேணியா என்ன மைனர் ஒப்பிறேசன் தானே; வெளியாலே தள்ளுற குடலே உள்ளுக்கு அமத்தித் தைக்கிறது தானே'

— அறிவு முரண்டு பண்ணியது

'இப்படியான நேரங்களிலே அறிவு பூர்வமான பரிசோதனை முயற்சிகள் வேண்டாம். அந்த மைனுக் குஞ்சை விட்டிடுவம்'

— மனசு சஞ்சலப்படுகிற போது மனிதனுக்குத்தான் எத்தனே குருட்டு நம்பிக்கைகள் தோன்றுகின்றன. அந்தக் குருட்டு நம்பிக்கைகளின் பலத்தில் மனிதன் ஏதோ ஓர்வகை ஆறுதலேப் பெறுவது உண்மைதான்.

அப்பா உள்ளே போன நேரம் பார்த்து ராஜன் சட்டென ஏணியைத் தூக்கி போஸ்ரில் சாத்திஞன். பட பட என ஏறிக் குஞ்சைப் பொந்தில் விட்டு விட்டுக் கீழ் இறங்கிஞன்.

இப்போ மனதில் உள்ள கலக்கம் அகன்று நெஞ்சு தெளிவு பெற்றிருந்தது.

ராஜன் முகம் கழுவி வெளிக்கிட்டான்.

''தம்பி எங்கே பயணம்'' — அப்பா.

''ஆஸ்பத்திரிக்கு''

''அம்மாட்டையோ?''

— ஆச்சரியமாகக் கேட்டார்:

''ஓ'' பிடரியைக் கை சொறிந்தது.

''ஏன் மத்தியானம் நான் பார்த்துக் கொண்டு வந்தனுன் தானே''

''சும்மா போய் பார்த்துக் கொண்டு வாறன்''

''சரி போட்டு வா. அந்த மைனுக் குஞ்செங்கை''

திரும்ப பொந்தில் விட்டதைச் சொல்ல கௌரவம் தடுத்தது.

''கூடு திறக்கேக்கை அது பறந்திட்டுது.

''சரி போட்டு கெதியாய் வா.

'பொந்திஞள் குஞ்சைக் கண்ட மகிழ்ச்சியால் தாய்ப் பறவை இனிய கீதம் இசைத்தது.

க்ருவிக் - - - க்ருவிக் - - -

க்ருவிக் க்ருவிக்;



தாய்: ஐயோ மகனின் கண் செருகியபடி படுத்திருக்கிருன் . . . போய் டாக்டரை கூட்டி வாங்க.

தந்தை: பைத்தியக்காரி . . திருவிழாக் காலம் ஆரோ ஒருத்தியில் காதல் ஏற்பட்டிட்டுது போல.

---

## சுயநல மனிதன்

மனிதன் சுயநலம் மிக்கவன்: மீன்களின் வாழிடமான கடலில் வலே பரப்பி மீன் பிடிக்கிருன். தான் படுக்கும் போது சிறுதுளி இரத்தமேனும் நுளம்பிற்குக் கொடுக்காமல் தனக்கு மேல் கொசு வலே விரிக்கின்ருன்.

— அம்பலம் —

## பூஞ்சோலேயில் பூத்த பூக்கள்

ஐந்து வீடு கேட்டும் கிடையாமல் மகா பாரதப் போர் ஆரம்பமானது.

ஐந்து வல்லரசுகளேக் கேட்காமலே உலக யுத்தத்தை நிற்பாட்ட வேண்டும்.

இனங்களுக்கிடையே அன்பு இல்லாமையே சீனப் பெருஞ்சுவர் எழும்பக் காரணம்

பொருமை என்ற தீயின் சின்னமே கிழக்கு மேற்கு யேர்மன் சுவர். இறைவனே மேலும் சுவர்களே உலகில் எழுப்பாதே.

— திக்வயல் —



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரியாதை!

இலேசான,
மழைத் தூற்றல் நேரம்,
நீதிபதியும், அவனும்
நேரில் -
சந்தித்துக் கொண்டனர்.
நீதிபதியைக் கண்டதும்,
அவன் -
தனது குடையை
மடக்கிக் கொண்டான்.

●

நீதிபதி கேட்டார்,
''என்னப்பா இது?''
அவன் சொன்னான்:
''உங்களுக்கு -
மரியாதை சார்!''

●

''பரவாயில்லை,
மழை பெய்கிறது -
குடையை விரித்துக்கொள்!''
நீதிபதி சொன்னார்.

●

தயங்கியவாறு
அவன் -
குடையை விரித்தான்.
உள்ளிருந்து
விழுந்தது -
ஒரு கஞ்சாக் கட்டு.

● மதியன்பன் மஜீத்,
காத்தான்குடி.

★ ★

# துணுக்குகள்......

ஆப்பிள் பழங்களில் வைட்டமின் 'சி' தோல் பகுதிகளில் மிகுதியாய் இருக்கிறது.

மொகலாயர் ஆட்சியில் தேசீய மன்னர் என்று இன்று அழைக்கப்பட்டு வருகின்ற அக்பருக்கு எத்தனை மனைவிகள் தெரியுமா?

367 மனைவிகள்.

உலகிலேயே மிகவும் அதிகம்மழை பெய்யும் நாடு கொலம்பியா. இங்கு ஆண்டுக்கு 4099 மி. மீட்டர் மழை பெய்கிறது.

ஒரு தேனீயின் மூளையில் 8,50,000 நரம்பு செல்கள் உள்ளன.

உலகிலேயே மிகவும் வேகமாகப் பேசிய மேடைப் பேச்சாளர் உண்டென்றால் அது மறைந்த அமெரிக்க ஜனாதிபதி ஜான் கென்னடி தான். இவர் நிமிடத்தில் 328 வார்த்தைகள் பேசக்கூடியவர்.

தொகுப்பு
— தரங்கம்பாடி. தனராஜ் —

★ ★

# பழமொழிகள்

+ கனவில் கண்ட பணம் கடன் தீர்க்கக் காணுமா?
+ மாம்பழம் ருசி என்று மரத்தோடு பிடுங்கலாமா?
+ காலமறிந்து பிளையாதவன் நூலறுந்த பட்டம்.

★ ★

## ✳ படித்துச் சுவைத்தவை

டாக்டர்: (ஒரு மனநோயாளியிடம்) உங்களுடைய பிரச்சனை என்ன?

மனநோ: எனக்கு சப்பாத்துக்களைவிட செருப்புக்களே அதிகம் விருப்பம்.

டாக்டர்: இதில் என்ன பிரச்சினை எனக்குச் செருப்புகள் என்றால் நல்ல விருப்பம்.

மனநோ: உங்களுக்கு செருப்புக்களை பொரித்தால் பிடிக்குமா? வறுத்தால் பிடிக்குமா டாக்டர்?

+ + +

டாக்டர்: நீங்கள் உங்களை நாயென்று நினைத்துக்கொண்டிருக்கிறீர்களா?

மனநோயாளர்: ஆமாம் டாக்டர்

டாக்டர்: எப்பொழுதிருந்து இப்படி நினைக்கிறீர்கள்.

மனநோயாளர்: நான் குட்டியாக இருந்ததிலிருந்து.

+ + +

இரண்டு பயித்தியக்காரர்களுக்கிடையில் ஒரு பிரச்சினை. அப்போது வானத்தில் தெரிவது சூரியனா, சந்திரனா என்பதுதான் பிரச்சினைக்குக் காரணம்.

இடையில் வந்த இன்னொரு பயித்தியக்காரனிடம் கேட்டார்கள். ''வானில் தெரிவது சூரியனா? சந்திரனா?'' அவன் தெரி சொன்னான்

''நான் வெளியூர் எனக்குத் யாது''

— அனபாயன் —



## நிஜம்

விரும்பும் ராகங்கள்
வீணையில் இருந்தால்
விவாகரத்துக்கே
அவசியம் இல்லை.

## சுவிகாரம்

எந்த
நாட்டில்
எழுத்தாளர்கள்
ஏற்றம் பெறுகின்றார்களோ;
எந்த நாட்டில்
கலைஞர்கள்
கௌரவிக்கப்படுகின்றார்களோ;
அதுதான் — என்
தாய் நாடு.
— அன்பு நெஞ்சன்




ஒருவர்: ஏன் அந்தத் தொழிற்சங்கத்தில் பேச்சுவார்த்தை இழுபட்டுக்கொண்டே போகிறது.

மற்றவர்: அது றப்பர் கூட்டுத்தாபனத் தொழிலாளர் சங்கம் அதுதான் இழுபடுகுது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தித்திப்பு
பற்றிய
தீர்ப்பு



சுவைஞர்கள் எல்லோராலும் கூறப்படும் தீர்ப்பு.
அண்ணா கோப்பிக்கு நிகர்

# அண்ணா கோப்பியே

அண்ணா தொழிலகம்
இணுவில்.

படித்தவர்கள் பாராட்டுகிறார்கள்.
வளர்க! என வாழ்த்துகிறார்கள்.

# மல்ரி சேவிசஸ்

தாபனத்தாரின்

# அஞ்சல்வழி ஆங்கிலம்

கல்விச் சேவை மூலம்
வீட்டில் இருந்தபடியே மிக இலகுவாக ஆங்கிலம் கற்கலாம்.

விபரங்களுக்கு:

மல்ரி சேவிசஸ்
37(351) மணிக்கூட்டு வீதி, (வெலிங்டன் தியேட்டர் சந்தி)
யாழ்ப்பாணம்.
தொலைபேசி - 22762.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வல்வெட்டித்துறை

# வையகத்திற்கு ஈர்ந்த வல்லவன்


விளையாட்டுத்துறையில் தமிழன் பெருமையை தரணி அறியச் செய்தவர்கள் மிகச்சிலரேயாகும். பாக்கு நீரிணையைக் கடந்து நவரத்தினசாமியும், ஏசியாட் விளையாட்டுப் போட்டிகளில் வெற்றியீட்டி, எதிர்வீரசிங்கமும் ஈட்டிய சாதனைகள் உலகில் இலங்கைத் தமிழர் புகழை ஓங்கச் செய்தன. இவர்களைத் தொடர்ந்து இளைஞரான ஆழிக்குமரன் ஆனந்தன் இருதடவைகள் தொடர்ச்சியாக பாக்கு நீரிணையைக் கடந்து சென்றதும் அவரின் புகழ் இலங்கையின் எல்லையைக் கடந்து ஒளி வீசத் தொடங்கியது. அதனைத் தொடர்ந்து அவர் நிலைநாட்டிய ஒவ்வொரு சாதனைகளும் இலங்கைக்குப் பெரும் புகழை ஈட்டிக் கொடுத்தன.

உலகில் உயர்ந்த மலையாகிய இமயமலையில் ஒருதடவை தமிழ் அரசன் தனது சின்னத்தைப் பொறித்தான் என இலக்கியம் பறை சாற்றுகின்றது. உலக சாதனைப் புத்தகமாகிய கின்னஸ் புத்தகத்தில் பலதடவைகளில் பலபக்கங்களில் பெயர்பொறித்து பெரும்புகழ் பெற்ற தமிழ் மகனாக விளங்கினார் ஆழிக்குமரன். கின்னஸ் புத்தகம் என ஒரு உலக சாதனைப் புத்தகம் இருப்பதை இலங்கையருக்கு அறிமுகப்படுத்திய பெருமைகூட அவரையே சாரும். அவர் நிலைநாட்டிய உலக சாதனைகள் அளப்பரியன. கைப்பந்து, கால்பந்து, கிரிக்கற் என நமது விளையாட்டு வீரர்கள் ஒரு வட்டத்திற்குள் சதுரம் போட்டுக்கொண்டு விளையாடித் திரிந்த வேளையில் அந்த வட்டத்திற்கு அப்பால் சென்று புதிய பல விளையாட்டுக்களை இலங்கையருக்கு அறிமுகம் செய்ததொடு தாமே அவற்றை விளையாடி உலக சாதனையை நிலைநாட்டியவரும் ஆழிக்குமரன் ஆனந்தனே யாகும். போல் பஞ்சிவ், நீரில் தவளைபோல் நிற்றல் போன்றவை இலங்கையர்கள் முன்பின் கேட்டறியாத விளையாட்டுக்கள் மட்டுமல்ல இவற்றில் ஆழிக்குமரன் நிலைநாட்டிய உலக சாதனைகளை முறியடித்தவர்கள் இற்றைவரை யாருமில்லை. டுவிஸ்ட் நடனம், போல் றூம் நடனம் என்பன ஓய்வு நேர கேளிக்கைகள் என பலர் எண்ணியிருந்த வேளையில் அவர் இவற்றை ஆடி உலக சாதனைகளை நிலைநாட்டினார். அவரது சாதனைப் பட்டியல்கள் இப்படிப்பல; அவை உலக சாதனைப் புத்தகமாகிய கின்னஸ் புத்தகத்திற்கு சிறப்பைக் கொடுத்துள்ளன.

அன்று 1962-ல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் அவர் மாணவனாக இருந்தபோது ஆரம்பமான அவரது சாதனைத் துடிப்பு இன்று 1984-ல் ஆங்கிலக் கால்வாயில் அஸ்தமித்துவிட்டது. நீருடன் விளையாடி சாதனைகள் பலபுரிந்த அவரது ஆத்மா நீருடனேயே சங்கமமாகிவிட்டது. வல்வெட்டித்துறை மண்ணில் பிறந்து வளர்ந்த அந்த இலங்கை மாதாவின் வீரனின் உடல் இன்று இலண்டன் மாநகரின் மண்ணுடன் இரண்டறக்கலந்துவிட்டது.

ஒருநாள் அவரை பம்பலப்பிட்டியிலுள்ள அவரது இல்லத்தில் சந்தித்து யான் உரையாடியபோது ஆங்கிலக் கால்வாயில் இறங்கி அதனை நீந்தி வெற்றி கொள்வேன். அதுவே எனது இறுதி சாதனையாகக் கின்னஸ் புத்தகத்தில் இருக்கும் என்று கூறியவருக்கு அம்முயற்சியே இறுதிப் பயணமாகிவிட்டது. பாக்குநீரிணை தொட்டு ஆங்கிலக் கால்வாய் வரை ஆழிக்குமரன் புகழ் அழியாது நிலைபெற்றுவிட்டது.

— சுவர்ணகேசரி



ஒருவர்: கல்யாணவீட்டில் சொந்த பந்தம் ஒருவரையும் காணவில்லையே!

மற்றவர்: வீடியோப் படம் எடுப்பதற்காக ஊரிலுள்ள அழகானவர்களுக்கு மாத்திரம் அழைப்பு விடுத்துள்ளார்கள்.

அதிமதுரம்

## கல்கியின் நகைச் சுவை

தமிழ் வெகு இனிமையான மொழியாக இருக்கவே தமிழ் பேசும் தமிழர்களும் இனிப்பாக இருந்தார்கள். அரக்கர்கள் அவர்களை அள்ளி அள்ளிச் சாப்பிட ஆரம்பித்து விட்டார்கள். அவர்களை எப்படி காப்பாற்றுவது என்று யோசித்தார் அகஸ்தியர். தமிழ் இவ்வளவு இனிமையாக இருப்பதால்தானே தமிழனுக்கு இனிப்பு கொஞ்சம் கசப்பு சேர்த்துவிட்டால்? உடனே தமிழ் இலக்கணத்தைப் படைத்தார். அவ்வளவுதான். அரக்கர்கள் தமிழர்களைச் சாப்பிடும் வழக்கத்தை விட்டுவிட்டார்கள்.

## ஏழையின் சிந்தனை

வானிலிருந்து வீழ்த்தப்படும் ஒரு அணுக்குண்டின் பெறுமதி உலக மாந்தர் முழுவதுக்கும் பல நாள் சாப்பாடு போடக் காணும். குண்டிற்குப் பதிலாக வானத்திலிருந்து சாப்பாட்டுப் பார்சல்களை வருடத்தில் ஒரு நாள் வல்லரசுகள் போடக் கூடாதா என்று ஒரு ஏழை கேட்கின்றார்.

— திக்கவயல் —



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தர்மம் கொடுங்க சாமி

''சாமி, சாப்பிட்டுப் பத்து நாளாச்சுங்க; காலணு இருந்தாத் தர்மம் கொடுங்க! என்ருன் பிச்சைக்காரன்.

ஆச்சரியத்துடன் அவனை ஏற இறங்கப் பார்த்துவிட்டு, ''உனக்குக் கால்லணு கொடுப்பதில் எனக்கு ஆட்சேபணையில்லை; ஆனுல் ஒரு நிபந்தனை!'' என்ருன் பிரயாணி.

''அது என்ன நிபந்தனைங்க...... ?''

''பத்து நாளா எப்படிப் பட்டினி இருந்தே? அந்த ரகசியத்தை எனக்கும் கொஞ்சம் சொல்லவேண்டும்: அதுதான் நிபந்தனை!''

'' அதுங்களா?... முந்தி நாட்டில் தொழில் செஞ்சிக்கிட்டிருந்தப்போ, எனக்குக் கெடைச்ச சம்பளத்தை வச்சிக்கிட்டு என்னுலே பத்துநாள்தான் சாப்பிடமுடிஞ்சுது; அதாலே பாக்கி இருபது நாளும் பட்டினி கிடந்து பழகிப்போச்சுங்க''

''இப்போ .........?''

''அந்தத் தொழிலைப்போல இந்தத் தொழில் அவ்வளவு மோசமில்லைங்க; மாசத்திலே, பத்துநாள்தான் பட்டினி!'' என்ருன் அவன்,

---

## கவிதை எழுதிய சரித்திரமேதைகள்

● நேரு உலக சரித்திரத்தை எழுதியிருக்கிருர். இது மேல்நாட்டிலும் பிரபலமடைந்திருக்கின்றது. ஆனுல் அவர் தாய்மொழியான காஷ்மீரில் அருமையான கவிதைகள் இயற்றியிருப்பது அநேகருக்குத் தெரியாது.

● மாஸேதுங் தன் 13-ம் வயதிலிருந்தே உலக சரித்திர ஆராய்ச்சியில் தம் வாழ்க்கையை அர்ப்பணித்தவர். அத்துடன் சீனுவின் கவிஞரும் ஆவார்,

---

## உலகைச் சிரிக்க வைத்த உலகப் பிரஜை சார்லிச் சப்பிளின்.

உலகைச் சிரிக்கவைத்து, ஹிட்லரைக் கலங்க வைத்தவர் சார்லி சாப்ளின். இவர் எதையும் சுயமாக சிந்திப்பவர்; அதனுல் ''கம்யூனிஸ்ட்'' என்ற பட்டம் இவருக்குச் சுலபமாகக் கிடைத்து விட்டது. காரணம், இவர் தம்மை அமெரிக்கப் பிரஜையாகப் பதிந்து கொள்ளாததுதான். ஏன் பதிவு செய்யவில்லை என்பதற்கு அவர் கூறிய பதில்.

''என்னுடைய பிரஜாவுரிமையை நிருபிக்க எத்தகைய பத்திரங்களும் எனக்குத் தேவையில்லை. ஒரே ஒரு துண்டுக் கடிதம் மட்டும் ஒருவனுக்குப் பிரஜாவுரிமை அளித்துவிடுமா? —யார் என்ன சொன்னுலும் சந்தேகமில்லாமல் நான் ஓர் அமெரிக்கப் பிரஜைதான். ஏனெனில், நான் அமெரிக்காவை நேசிக்கிறேன்—ஆனுல் அதற்காக மற்ற நாடுகளை வெறுக்கவில்லை!

உண்மை என்னவென்ருல், நான் லண்டன் நகரத்தில் பிறந்தவன். அதனுல் என்ன?—இது போன்றே நான் இந்தியாவில் பிறந்திருக்கலாம்; அல்லது சைபீரியாவில் பிறந்திருக்கலாம்—எங்கே பிறந்தாலும் நான் எந்த நாட்டைச் சேர்ந்தவனல்ல; மாபெரும் மனிதக் குடும்பத்திலே உருளும் ஓர் அணுவான உலகப் பிரஜை!

''தந்திக் கம்பிகள், தபால், டெலிபோன் ஆகாய விமானம் ஆகிய சாதனங்களால் உலகின் தூரம் குறைந்துவிட்டது. எல்லைகள் தகர்ந்து இணைந்துவிட்டன. உலக மார்க்கெட்டில் ஸ்வீடனின் இரும்பும், பின்லாந்தின் நிக்கலும், இங்கிலாந்தின் நிலக்கரியும் நமக்குத் தேவைபட்டுகின்றன. உலகம் ஒரே பொருளாதார இணைப்பில் உருளும் பொழுது ஒரே ஆத்மார்திக இணைப்பையும் நாம் ஏன் கொள்ளக்கூடாது?''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SHOBA

சௌந்தர்யமான சூழ்நிலையில்
சிற்றுண்டிவகைகள் குளிர்பானங்கள்
சுவைத்துமகிழ சௌகர்யமான இடம்

ஷோபா ஏஜென்சீஸ் லிமிற்றெட்

ஸ்தாபனத்தாரின் மற்றுமொரு தரமுயர்ந்த சேவை.

▣ பிரிமா பாண், ▣ கேக் வகைகள், ▣ கட்லற், றேல்ஸ், பற்றீஸ்,
▣ வட்டிலப்பம். ▣ ஐஸ் கிறீம், ஐஸ் சொக், ▣ யோகட்
▣ பழச்சாறுகள், ▣ பல குளிர்பானங்கள், (பலசுவைகளில்) தயிர்
▣ இனிப்பு வகைகள் ▣ மற்றும் பலவிதமான சிற்றுண்டிவகைகள்
(ரூபா 2/- முதல் 5/50 வரை)

சௌகரியமான, ஆசன வசதிகளுடன் கூடிய, வித்தியாசமான சூழலில் சிறுபொழுதை இனிமையாகக் கழிக்கவும் உயர்தரமான சிற்றுண்டி வகைகளையும், மென்பானங்களையும் சுவைத்து மகிழவும் வருகை தாருங்கள்!

❋ உங்கள் விருந்தினர்களை, உபசரிக்கவும், உங்கள் வைபவங்களைச் சிறப்பிக்கவும் தேவையான சிறந்த சிற்றுண்டி வகைகளையும், குளிர்பானங்களையும் எம்மிடம் நியாய விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

★ ஞாயிற்றுக்கிழமைகளில் கோழிப் புரியாணி பெற்றுக்கொள்ளலாம்.

( ஓடர்கள் வெள்ளி மாலை 5 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும் )
( சுன்னாகம் சந்தியிலிருந்து காங்கேசன்துறைப் பக்கமாக 600 யார்தூரத்தில்)

இன்றே விஜயம் செய்யுங்கள், உங்கள் சுவை உணர்ந்து சேவை செய்யும் ஒரே ஒரு ஸ்தாபனம்.

SHOBA AGENCIES LTD.,
194, K. K. S. Road, Chunnakam.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணவறைக் கோலம்
கண்ணிறைந்த கோலம்.
அதனை வண்ணக் கோலத்தில்
வாழ் நாள் முழுக்க பார்த்து
மகிழ, ரஞ்சனுஸ் வீடியோ
சென்ரரை நாடுங்கள்.

**TV, DECK வீடியோ படங்கள்!**

வாடகைக்குப் பெறவும்
வாங்கவும்.

## ரஞ்சனுஸ்
## வீடியோ சென்ரர்

60, பெரிய கடைவீதி, யாழ்ப்பாணம்.

மனை- அகத்தில் இருக்கவேண்டிய நூல்

## திருக்குறள்

மனை-அகத்தில் இருக்கவேண்டிய நூல்

முயல் மார்க் நூல்

உங்கள் அழகிய தையல், வேலைகட்கு
முயல் மார்க் நூல்களையே பாவியுங்கள்

தயாரிப்பாளர்கள்:—

## சம்பியன் திரட்
## மனுபக்சரிங் கம்பனி

கொழும்பு - 12

# சீமாட்டி

-ஒரு சேலைப் பூஞ்சோலை-

* கல்யாணப் பட்டு
* காஞ்சி புரம்
* ஆரணி
* தர்மபுரம்
* பனாரிஸ்

எல்லா வகைச் சேலைகளுக்கும்
எழில் மிகு வர்ணங்களிலும்

கிடைக்குமிடம்:—

-சீமாட்டி-

15,நவீன சந்தை,மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

வர்த்தக உலகின் வைரஏணி

## மணிக்குரல் விளம்பர சேவை

நாளுக்கோர் புதிய பாணியில் வர்த்தக ஸ்தாபன
மேம்பாட்டிற் கென தன்னை முழுமையாக அர்ப்பணித்த

-ஒரே சேவை-

யாழ் -மணிக்குரல் விளம்பர சேவை

இப்பொழுது மதுரகரமான இசையுடன்,
மக்களைக் கவர்ந்திழுக்கும்
மணிக்குரல் விளம்பர சேவையின்
விளம்பர அறிவிப்புகள்; தினமும்
காலைமுதல் இரவுவரை நடைபெறுகிறது.
வர்த்தகப் பெருமக்களுக்கு;
உங்கள்

விளம்பரங்களை சிறந்த முறையில்
ஒலிபரப்ப நாடுங்கள்

யாழ்-பஸ்நிலையத்தில்

## மணிக்குரல் விளம்பர சேவை

அறிவிப்பு—மேஜர் ஷண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திணறவைத்த கிணறு

'ஒப்பந்தத்தில் உள்ளவாறு குடியேற்றத் திட்டக் கிணற்று வேலைகளை ஒக்டோபர் மாதம் 20 ஆந் திகதிக்கு முன்னர் முடித்து அன்றைய தினமே கிணற்றைப் பொறுப்புக் கொடுத்துவிட வேண்டும். தவறின், ஒப்பந்தம் இரத்துச் செய்யப்படும்.'

தமக்கு வந்த கடிதத்தின் இந்த வாசகங்களை மட்டும் திருப்பித்திருப்பி வாசித்துக் கொண்டிருந்தார் ஒப்பந்தகாரர் வேலாயுதர்.

கடிதம் தந்த அதிர்ச்சியில் அவருக்குக் கையும் காலும் ஓடவில்லை.

கிணற்று வேலைக்கான அவருடைய 20,000 ரூபாய் 'ரென்டர்' ஒப்புக்கொள்ளப்பட்டபோது எப்படியும் ஐயாயிரம் ரூபாயாவது இலாபம் கிடைக்குமென்றுதான் அவர் எதிர்பார்த்தார். பதினாலாயிரம் செலவு செய்து, இருபதடி ஆழத்துக்கு வெட்டிய பின்னரும் தண்ணீர் ஊற்றுவரவில்லை. சுண்ணாம்புக் கற்பாறைக்கு மேலே நிலத்திலிருந்து மூன்று அடிவரை கட்டு வேலை செய்வதற்கு இரண்டாயிரம் செலவாகி விடும். மேலதிகமாக இனிமேல் ஆழமாக்கும் ஒவ்வொரு அடிக்கும் ஆயிரம் ரூபாய் வரை செலவாகும்.

அப்படி இரண்டு மூன்று அடி தோண்டிய பின்னரும் தண்ணீர் வராவிட்டால்... ...

வேலையைப் பொறுப்புக் கொடுக்க முடியாது. பொறுப்புக் கொடுக்காவிட்டால் மீதியாக எடுக்க வேண்டிய ஆறாயிரம் ரூபாவை எடுக்க முடியாது. ... ...

இன்னும் பத்தே பத்து நாட்களில் வேலைகளை முடித்துக் கிணற்றைப் பொறுப்புக் கொடுக்க வேண்டும்.

நினைக்க நினைக்க அவருக்குத் தலை விறைத்தது. தலை மயிரைப் பிய்த்துக்கொண்டு அவர் யோசித்தார்.

திடீரென அவருக்குச் சின்னத்துரையின் ஞாபகம் வந்தது. ஆனைப்பட்ட பொறியியலாளர்களையே திணறவைத்து ஒப்பந்த வேலைகளுக்குச் சின்னத்துரை தான் என்ற பெயரைத் தட்டிக் கொண்டவர் அவர். ஒப்பந்த வேலைகளில் வேலாயுதருக்குக் குருவாகவும் வழிகாட்டியாகவும் அமைந்தவர்.

தனது குருநாதரிடம் ஆலோசனை கேட்க ஓடோடி வந்தார் வேலாயுதர்.

சின்னத்துரை சொன்னார்.

''தம்பி... நீர் 20 ஆந் திகதி கந்தோருக்குப் போய் என்ஜினியரைக் கூட்டிக்கொண்டு வந்து வேலையைப் பாரம் கொடும். மீதிக் கிணற்று வேலையை நான் முடிச்சுவைக்கிறேன்: ஆனால் அண்டைக்குப் பின்னேரமே வவுச்சர் குடுத்துக் காசோலை எடுத்துப் போடவேணும். கிணற்று வேலை எண்டபடியால் பிடிகாசு ஒண்டும் கழிக்கமாட்டினம்''.

சின்னத்துரையின் வாக்கு தேவாமிர்தமாக அவர் காதுகளில் இறங்கியது. நன்றிகூற வார்த்தைகள் வராமல் தடைப்படக் கண்களில் நீர் கட்டியது.

இருபதாந் திகதி அலுவலக ஜீப்பில் பொறியியலாளருடனும் இன்னும் சில உத்தியோகத்தர்களுடனும் குடியேற்றத் திட்டத்திற்குப் போனார் வேலாயுதர்.

கட்டுவேலை அழகாகச் செய்து முடிக்கப்பட்டிருந்தது. கிணற்றை எட்டிப் பார்த்தார். மூன்றடி வரையில் கிணற்றில் தண்ணீர் இருந்தது. வேலாயுதர் மயக்கம்போட்டு விழாதகுறை.


மீதிக் கொடுப்பனவைக் காசோலையாகப் பெற்றுக் காண்டு நேரே சின்னத்துரையைக் காணப் போனார் வேலாயுதர். சின்னத்துரை அவரைச் சிரித்தபடியே வரவேற்றார். ஆவலை அடக்க முடியாமல் வேலாயுதர் கேட்டார்.

''அண்ணை அந்தக் கிணற்றிலை திடீரென்று மூன்றடிக்குத் தண்ணீர் எப்பிடி வந்தது?''

சிரிப்பு மாறாமலே சின்னத்துரை சொன்னார்.

''முதல்நாள் இரவு என்னுடைய பவுசரிலை தண்ணீரை நிரப்பிக் கொண்டுபோய் கிணற்றிலை விட்டனான்'' ★

—ச. பத்மநாதன்.—



☐ ''உனது இரத்ததானம் நாட்டிற்குப் பெரிய சேவை''

● போய்யா ... எனது இரத்தத்துக்கு அரசாங்கம் கொடுத்த பணம் ஒரு கிலோ வெங்காயம் வாங்கக் காணாது.''

☐ ???



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கிய செய்திக்கொத்து

● யாழ். பல்கலைக் கழகத் துணை வேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தனின் மணிவிழாவை 1984-05-12 ஆம் திகதி அன்று கலை இலக்கியப் பத்திரிகை நண்பர்கள் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் வெகு சிறப்பாக கொண்டாடினார்கள்.

பேராசிரியரின் மணிவிழா மலரும். அவர் எழுதிய பத்துக் கட்டுரைகள் அடங்கிய வித்தியானந்தம் என்ற நூலும் அன்று வெளியிடப்பெற்றன.

● தஞ்சாவூர் பல்கலைக் கழகத்தினால் ஆண்டு தோறும் வழங்கப்பெறுமென அறிவிக்கப்பெற்ற சிறந்த தமிழ் நூலுக்கான ஒரு லட்ச ரூபா பரிசையும், அதற்கான விருதையும் 1984 ஆம் ஆண்டில் வெளியிடப்பெற்ற கவியோகி சுத்தானந்த பாரதியாரின் 'பாரத சக்தி மகாகாவியம்' என்ற நூல் பெற்றிருக்கிறது.

இதே பல்கலைக்கழகம் 1984 மார்ச் 24 ஆம் திகதி தனது முதலாவது சிறப்புப் பட்டமளிப்பு விழாவில் 'இலக்கிய கலாநிதி' என்ற பட்டத்தை அமரர் தனிநாயக அடிகளாருக்கு நினைவாஞ்சலியாக வழங்கியது.

● 1977 — 80 வரையுள்ள காலத்தின் பொருட்டுச் சாகித்திய மண்டலப் பரிசுகளைப் பெற்றுக்கொண்டவர்களுக்கான பரிசளிப்பு விழா 1980 மார்ச் 10 ஆம் திகதி பிரதேச அபிவிருத்தி அமைச்சரின் அலுவலகத்தில் நடைபெற்றது. விழாவிற்குத் தலைமைவகித்த அமைச்சர் எதிர்காலத்தில் பரிசுத்தொகை குறைந்த பட்சம் ஐயாயிரம் ரூபாவாக அதிகரிக்கப் படுமென அறிவித்தார்.

● கடந்த ஏழாண்டுகளாகச் சீரிய முறையில் இயங்காதிருந்த யாழ். இலக்கிய வட்டம் மீண்டும் துடிப்புடன் செயலாற்றத் தொடங்கியுள்ளது. 1984-06-23 ஆந் திகதி கூடிய இதன் ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் திரு. சு. சபாரத்தினம் (சசிபாரதி) தலைவராகவும், யாழ்வாணனும், கவிஞர் வே. குமாரசாமியும் இணைச் செயலாளர்களாகவும், 'குறமகள்' செம்பியன் செல்வன் ஆகியோர் துணைத் தலைவர்களாகவும், செங்கை ஆழியான் பொருளாளராகவும் தெரிவு செய்யப்பெற்றனர்.

இலக்கியவட்டச் செய்தி மடலின் முதலாவது இதழ் செம்பியன் செல்வனை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்திருக்கிறது.

இவ்வருடத்தின் மூன்றாவது காலாண்டு தொடக்கம் காலாண்டுதோறும் வெளிவரும் மூன்று சிந்தனை சிறுகதைகளுக்கும், மூன்று மரபுக் கவிதைகளுக்கும் பரிசுகள் வழங்கவும் இலக்கிய வட்டம் தீர்மானித்துள்ளது.


● மாத்தளை இலக்கிய வட்டம் மலையக எழுத்தாளர்கள் கலைஞர்கள் மகாநாட்டினை மாத்தளையில் விரைவில் நடத்துவதற்குத் தீர்மானித்துள்ளது. நடப்பாண்டிற்கான இலக்கிய வட்டத் தலைவராக ஏ. வீ. பீ. தோமஸ் அவர்களும், இணைச் செயலாளர்களாக வீ. நமசிவாயமும்' பெ. பெரியசாமியும் அண்மையில் நடைபெற்ற ஆண்டு கூட்டத்தில் தெரிவுசெய்யப்பெற்றனர்.

● சாகித்திய மண்டலப் பரிசு பெற்ற முப்பது பேரில் ஐவர் மகாஜனக் கல்லூரியின் பழைய மாணவர்கள். திருவாளர்கள் வ. குகசர்மா, செ. கதிரேசர் பிள்ளை, செ. சிவசுப்பிரமணியம், ம. பார்வதிநாதசிவம், வேல் அமுதன் ஆகிய இவ்வைவருக்கும் மகாஜனாவின் பழைய மாணவர் சங்கத்தினர் பாராட்டுவிழா நடத்திக் கௌரவித்தார்கள்.

● கல்ஹின்னைத் தமிழ் மன்றம் தனது பதினேழாவது வெளியீடாகக் கவிஞர் அன்பு முகைதீன் அவர்களின் 'மாதுளம் முத்துக்கள்' என்ற கவிதைத் தொகுதியை அண்மையில் வெளியிட்டிருக்கிறது.

● வீரகேசரிப் பதில் ஆசிரியராகக் கடமையாற்றி யூன் மாதத்தில் ஓய்வுபெற்ற திரு. டேவிற் ராஜூவிற்குக் கொழும்புத் தமிழ்ச் சங்கம் விழா எடுத்துப் பாராட்டியது.

● அண்மையில் நடைபெற்ற யாழ். பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவில் பிரபல எழுத்தாளர்களான சி. மௌனகுரு 'கலாநிதிப் பட்டத்தையும், செங்கை ஆழியான் முதுகலைமாணிப் பட்டத்தையும் பெற்றுக்கொண்டார்கள்.



சங்கீத வித்துவான்: நான் பாடும் தோடியைக் கேள்.
மனைவி: வைரக்கல் தோடு செய்து தந்திட்டு பாடுங்க கேட்கிறேன்.

## யப்பானும் யாழ்ப்பாணமும்

ஒரு தொழிற்சாலைக்குத் தன்னை ஒருவருடம் ஒப்பந்தத்திற்குப் பொருத்திக்கொண்ட யப்பானியப் பெண் கால எல்லை முடிந்ததும் பெருந்தொகைப் பணத்துடன் வெளியேறினாள். இப்பணத்தை என்ன செய்யப் போகிறாய் எனக் கேட்டபோது சீதனத்திற்கு என்றாளாம். யப்பானில் தொழிற்சாலையாவது இருக்கிறது? யாழ்ப்பாணத்தில் என்ன இருக்கிறது என ஒரு தமிழ்ப் பெண் கேட்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்து வாசினைத் திரவியம்

இலங்கை 'மாப்பை' விரித்து அதன் தலையில் யாழ்ப்பாணத்தைத் தேடிப்பிடித்து சிகப்பு பென்சிலால் பெரியதொரு புள்ளி போட்டு 'இதுதான் கொக்குவில்' என்று பீற்றிக் கொள்ளும் அளவிற்குப் பிரபலமானதல்ல எங்கள் ஊர்...

கொக்குவில் என்றவுடன் சிலருக்குக் 'கானுசேனு'வின் சோடா போட்ட நல்ல பளபளப்பான நாட்டுச் சுருட்டு ஞாபகத்திற்கு வரலாம்; சிலருக்கு முறைப்படி காய்ச்சிய காரசாரமான கள்ளச் சாராயத்தின் நெடி நினைவுக்கு வரலாம். இது இரண்டிலும் அநுபவம் இல்லாத துர்ப்பாக்கியசாலிகள் பழைய பழைய பிரபல கொலைக்கேசுகள் சிலவற்றை ஞாபகத்திற்குக் கொண்டுவந்து அனுபவித்து ரசிக்கலாம்...

கொக்குவிலுக்குப் புதிதாக வரும் வாசகர்களுக்கு, கொக்குவில் எங்கே ஆரம்பமாகிறது என்ற சந்தேகம் எழலாம்,

காலை 6-20 க்கு யாழ்ப்பாணத்தைவிட்டுப் புறப்படும் கொழும்புப் புகைவண்டியில் பிரயாணம் செய்திருக்கும் அன்பர்கள், புகைவண்டி, அடுத்துவரும் சுடலை ஒன்றைக் கடக்கும்போது நெடிதுயர்ந்த பனைகளின் பின்னல் சுகாதார இன்ஸ்பெக்டரை நாளது வரை ஏய்த்து வந்து நூற்றுக்கணக்கான தலைப்பாகைகள் மிதப்பதைக்காணத் தவறியிருக்கமாட்டார்கள்.

சந்தேகமின்றி, கொக்குவில் அங்கேதான் ஆரம்பமாகின்றது... ... ...

(அ. முத்துலிங்கத்தின் 'அக்கா' சிறுகதைத் தொகுதியிலுள்ள கோடைமழை என்ற சிறுகதையிலிருந்து.)

யாழ்ப்பாண மாதா மலடியென்று பெயர் கேளாமல் சத்திர சிகிச்சையோடு பெற்றெடுத்த நொண்டிக் குழந்தை தொண்டைமான் ஆறு கடலிலே இருந்து வெட்டப்பட்ட அந்த உப்பங்கழிக்கு 'ஆறு' என்று பெயரிட்டதே விசித்திரம். அதனிலும் விசித்திரம் அந்தக் கழிக்கரையில் முருகப் பெருமான் இருக்க எண்ணங்கொண்ட கதை.

இந்த விசித்திரமான முருகன் பல திருவிளையாடல்களைப் புரிய, சாதிபேதமில்லாமல் எல்லா நோயாளரும் அவனைத் தஞ்சமடைந்தனர், இப்படித் தஞ்சமடைந்த பலபேருக்கும் அன்னமளிக்கும் புண்ணியத்தை பல 'பணக்காரப் புள்ளிகளுக்கு' நோய் கொடுப்பதனுல் தீர்த்து வைத்தான்.

(ருஷ்ய மொழியில் வெளிவந்த இலங்கைச் சிறுகதைத் தொகுதியில் இடம்பெற்ற இரசிகமணி கனகசெந்திநாதனின் 'ஒரு பிடி சோறு' என்ற சிறுகதையிலிருந்து.)

நள்ளிரவை ஏகத்தாளித்தும் நத்தையாக இழுபட்டு ஊரும் நீளிரவு. பிரதான ஆசாரியரும் வேதபாரகரும்— மூப்பரும் அமிழ்ந்து கிடக்கும் அஞ்ஞானத்தையே உரையிடுங் காரிருள்.

திக்குத் திசையெல்லாஞ் சங்கமமாகிய அந்த நிசியின் இருள்வனத்தில், சீமோன் பேதுரு பசை உலராத ஒரு நம்பிக்கையில் ஒட்டுண்டு நடக்கின்றன்.

'மெய்யாகவே மேய்ப்போன் நம்மை விட்டு பிரியும் காலம் வந்து விட்டதா?' என்ற கடாவிற் கருதரித்து, நிமை அசைப்பு நேரத்தில் விளைந்து, பிரசவமான அமானுஷ்ய சக்தி அவனை இயக்குகின்றது. பாதங்களை விறைக்கச் செய்யும் குளிரும், விரல்களைப் பொசுக்கிடும் சுடு மணற்காடும் அவனுக்கு' அந்நியமல்ல.

ஆயனின் விசுவாசக் கதகதப்பும், உபதேசத்திருநீழலும் அளிக்கும் அரணைக் கெட்டியாகவே நம்பியதினுல், வெட்பதட்ப உபாதித்தல்களென்ற மாம்ஸ ஆக்கினைகள் அவனைத் தாக்கியதில்லை.

விந்தையிலும் விந்தையாக' இன்று மட்டுமே மனப் புழுதியில், உலைவுகள் சல்லி வேர் தள்ளி ஏது வென்ன? அநிசமாக நீண்டு மதர்த்து, பஸ்காவைப் புசித்த இரவு இடறல்களின் செங்குத்து மலையாக உயர்கின்றன? பேதுருவின் மனச் சரிவுகளில் அலைவிளிம்பு சுழன்றும் எண்ணச் சுழிகள்... ... இருப்பினும் உலகினை இரட்சிக்கத் தொடங்கிய அருள்ஜோதி வழி நடத்துகின்றது என்ற பின்னமற்ற நம்பிக்கை உந்தி இயக்க, பேதுருவின் கால்கள், உடற்பாத்திரத்தின் சுமையை இழுத்துச் செல்கின்றன.

(எஸ். பொன்னுத்துரையின் 'முன்' சிறுகதையிலிருந்து.)

நித்தியலிங்கத்தை நீங்கள் நிச்சயம் பார்த்திருப்பீர்கள். ஆனுல் இவர் தான் நித்தியலிங்கம் என்பதை நீங்கள் அறியத் தவறியிருக்கலாம். அவரை இன்னும் அடையாளம் கண்டு பிடிக்காதவர்கள் பட்டினத்து வீதியை ஒருதரம் வலம் வந்து விடுவீர்களேயானுல், இவர் தான் நித்தியலிங்கம் என்பதைக் கண்டு விடுவீர்கள்.

கையில் தொங்கிக் கொண்டிருக்கும் மான் மார்க் குடை; இடது தோளில் ஏகாவட்டம் விட்டிருக்கும் பரமாஸ் சால்வை; அதே பக்கத்துக் கமக்கட்டில் குந்தியிருக்கும் ஒரு பைல்; அதை நிறை பாதப் பிள்ளைத்தாச்சியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க்கும் காகிதக் கட்டுகள், நெஞ்சப் பையில் கொலு வீற்றிருக்கும் உலக்கை 'மாடல்' பார்க்கர் பேனு; கால்களில் 'கிறீச் கிறீச்' சென்று ஓசையிடும் செருப்புகள் இப்படியான அலங்காரங்களுடன் ஒருவரை நீங்கள் வீதியில் பார்த்து விடுவீர்களேயானல், அவர் தான் நித்தியலிங்கம் என்று ஊகித்துக்கொள்ளுங்கள். உங்களுடைய ஊகம் நூற்றுக்கு நூறு சரியாகத்தானிருக்கும்.

(டொமினிக் ஜீவாவின் 'செய்திவேட்டை' சிறுகதையிலிருந்து) ★

தொகுப்பு—வாசுகி—

## இதயத்தைப்பற்றி...

★ இதயம் நாளொன்றுக்கு 103,680 தடவைகள் துடித்து, 2500 கலன் இரத்தத்தை உற்பத்திசெய்கிறது.

★ உடலின் ஒவ்வொரு உள்ளுறுப்பும் ஒன்றையொன்று நம்பி வாழ்கின்றன; ஒன்று பாதிக்கப்பட்டால் மற்றென்று நிச்சயம் பலவீனமடைகிறது. மூத்திரகோசன் பாதிக்கப்பட்டால் இதயம் உடனுக்குடன் பாதிக்கப்படும்.

★ மிதமாக மது அருந்துவது இதய இயக்கத்திற்கு நன்மை தரும். அதிகமாக காபி அருந்துபவரின் இதயம் வேகமாகத் துடிக்கும்.

★ மார்பின் இடதுபுற வலியால் நடுங்கவேண்டாம். மார்பின் மத்தியில் வலியுடன் சிரமமான சுவாசம் உண்டாவதே இதயநோயின் அறிகுறி.

போலிப்பட்டு பல தடவைகளில் அசல் பட்டைவிட அதிகப் பளபளப்பு உள்ளதாக இருக்கும்.

— ஜோன்கால்ஸ்வர்த்தி

## ✱ கலைஞனும் கவிஞனும்

சில சினிமாப் பாடல்கள் சில பிரச்சனைகளையும் உருவாக்குகின்றன. கவியரசர் கண்ணதாசனின் ஒரு பாடல் ''சின்னச் சின்ன ஊரணியாம்'' என்று தொடங்குகிறது. இது ஒரு பழைய பாடல். இந்தப் பாடலிலே ஒரு விடயம், இப்படி வருகிறது ''மாமரத்தின் கிளைகளிலே மாடப்புறாக் கூடுகளாம் கூடுகளில் குடியிருக்கும் குஞ்சுகளாம் பிஞ்சுகளாம்.''

கலைஞர் கருணாநிதி இப்பாடலிலேயுள்ள பிழையைச் சுட்டிக் காட்டினார். மாடங்களில், அதாவது வீடு, கோயில், உயர்ந்த கட்டிடங்கள், போன்ற மாடங்களில் கூடுகட்டி வாழ்வதால் தான் அந்தப் புறாக்களுக்கு மாடப்புறா என்று பெயர். மாடப்புறா மரங்களில் கூடுகட்டுவதேயில்லை. என்று சர்ச்சையை உண்டாக்கியதும், கவியரசர் தனது தவறை கண்ணியமாக ஒப்புக் கொண்டார். சினிமாப் பாடல்களில் இத்தகைய பிரச்சனைகளும் இடம்பெறுவதுண்டு.

— அனபாயன் —

## நகைச்சுவை

மிருகேந்திரனாகிய சிங்கத்திற்கு சிரிக்க தெரியாது. புலிக்கும் யானைக்கும் சிரிக்கத் தெரியாது. குதிரை கனைப்பது சிரிப்பது போல் இருக்குமே தவிர அதுவும் சிரிப்பதில்லை. ஜீவராசியில் முற்படியில் உள்ள வானரம் எத்தனை எத்தனையோ விதமான சேஷ்டைகள் செய்வதைப் பார்த்திருக்கிறோம். அத்தகைய குரங்குகள் கூட சிரிப்பது கிடையாதாம்; குரங்கு பல்லைக் காட்டினால் கோபத்திற்கு அடையாளமாம். பறவைகள் சிரிப்பதில்லை என்பதைச் சொல்ல வேண்டியதில்லை.

பறவைகளிற்கு அளித்த இறகுகளையும், விலங்குகளிற்கு கொடுத்த வாலையும் கடவுள் மனிதனுக்கு கொடுக்க மனமில்லாமல் விட்டு விட்டார். ஆனால் அந்தப்பாக்கியங்களிற்கு எல்லாம் மேலான சிரிக்கும் பாக்கியத்தை கொடுத்துள்ளார், அவ்விதம் கடவுள் மனிதனுக்கு என்று பிரத்தியோகமாய் அளித்திருக்கும் வரப்பிரசாதமாகிய சிரிப்பை உண்டாக்கவும் பெருக்கவும் பாடுபடுகிறவர்கள் எல்லோரும் கடவுளுக்கு உகந்த திருப்பணி செய்பவர்கள் அல்லவா.

— கல்கி —

## மகான்களின் முடிவு இப்படியா?

கி. மு. 399. சாக்ரடீஸை விஷமிட்டுக் கொன்றார்கள்!

கி. பி. 29 ஏசுநாதரை சிலுவையில் அறைந்தார்கள்!

கி. பி. 660. முகம்மது நபி மெக்காவுக்குத்தப்பி ஓடினார்!

கி. பி. 1865. ஆப்ரகாம் லிங்கனை கொலை செய்தார்கள்!

கி. பி. 1918. லெனினை துப்பாக்கியால் ஒருவன் சுட்டான் அக்குண்டு உடம்பிலேயே தங்கி 1924-ல் அவரைக் கொன்று விட்டது

கி. பி. மாகாத்மா காந்தியை மதவெறியன் ஒருவன் சுட்டுக் கொன்றான்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## முக்கிய குறிப்பு

நாளுக்கு நாள் ஏராளமான விண்ணப்பங்கள் வருகின்றன. அத்துடன் ஒருமுறை பிரசுரித்த பின்னும் மீண்டும், மீண்டும் விண்ணப்பிக்கிறார்கள். ஒரு சிலர் பல் வேறு விலாசமிட்டு அனுப்புகிறார்கள் இதனால் ஒரு சிலரது விண்ணப்பமே மீண்டும்மீண்டும் பிரசுரிக்கப் படுகிறது. இதனால் இதனைக் கட்டுப்படுத்தும் முகமாக 5 ரூபா முத்திரை இணைத்து அனுப்பும் விண்ணப்பமே பிரசுரிக்கப்படும்.

K. T. அரசு — 28
Fiudo Co Ltd.
P. O. Box. 43, Rabigh 21911
K. S. A.
● Clk / Asst.
☐ Story Books, T.V, Pen Pals.

S. Mohanraj — 25
P. O. Box 9546.
Riyadh 11423.
Saudi Arabia, K. S. A.
☐ T. V, நகைச்சுவை, பாட்டு.

N. G. Radhakrishnan: — 21
Quarters No 1
U.C Road,
Chavakachcheri.
● I. C. M. A.
☐ Poem, Friends Reading Etc.

A. Uthayan. — 22
● Eckeseyer S. T. R - 1
5800 Hagen - 1
West Germany
☐ Radio, News Paper & T.V.

க. உதயன். — 20
பழைய வீதி, குஞ்சு மதவடி,
ஆனைக்கோட்டை.
● மாணவன்.
☐ கதை, கவிதை ஆக்கம், பட்மிட்டன், தொலைக்காட்சி.

எம். எஸ். சபீனா: — 17
பெரிய பாலம்,
மூதூர்-5,
● மாணவி.
☐ நோயாளிகளை சுகம் விசாரித்தல், முத்திரை சேகரித்தல்

K. அமிர்தலிங்கம். — 17
பெரிய புல்லுமலை E P
● கடை வேலை.
☐ வானொலி, பத்திரிகை.

S. கோகுலராஜா — 21
14. சுவாட்ஸ் லேன்,
சுண்டுக்குளி.
● மாணவன்:
☐ T. V பார்த்தல், கூடைப் பந்தாட்டம்.

A. G. இயோப்கான் — 24
MN/ புதுக்குடியிருப்பு.
எருக்கலம்பிட்டி
● வியாபாரம்
☐ வானொலி T.V, கதை எழுதல் கரம் விளையாடுதல்' உதை பந்தாட்டம்.

தி. உதயசூரியன்: — 21
ஊரெழு கிழக்கு,
சுன்னாகம்.
☐ பத்திரிகை, வானொலி, கதைப்புத்தகம்.



சின்னசாமி: இந்த கிரிக்கற் விளையாட்டு வரலாற்றில் ஆங்கிலேயர்தான் கூடுதலாக "சென்சரி" அடித்திருக்கிறார்கள்.

பெரியசாமி: விளையாட்டில் என்ன... வயதிலும் அவர்கள்தான் செஞ்சரி... இன்று இங்கிலாந்தில் 100 வயதிற்கு மேற்பட்டவர்கள் பலர் இருக்கிறார்களாம். அதில் கூடுதலானவர்கள் பெண்களெனப் பேப்பர்ச் செய்தி கூறுகிறது.

---

☐ என்னிலும் பார்க்க அண்ணே, அந்த வெளவால் அதிர்ஷ்டம் உள்ளது.
● "எப்படி"?
☐ மனிதப் பிரச்சனைகளை நினைத்தால் என்னால் பஞ்சு மெத்தையிலும் நித்திரை வருவது இல்லை. வெளவால் தலைகீழாக நித்திரை கொள்கின்றது.

— திக்கவயல் —

### சிரித்திரன் பேனா நண்பர் கழகம்

பெயர்: ........................................

விலாசம் ........................................

தொழில் .................... வயது ....................

பொழுது போக்கு: ........................................

இத்துடன் ரூ 5/- முத்திரை இணைத்துள்ளேன்

கையொப்பம் .................... திகதி ....................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதினப் பத்திரிகையில் புனிதப் பணி புரிந்து ஓய்வுபெறும் ராஜு

— அன்னலட்சுமி இராஜதுரை —



உடனுக்குடன் நிகழும் செய்திகளையும், கருத்துக்களையும், உணர்வுகளையும் பகிர்ந்து கொள்ளும் பத்திரிகைகள் இன்று மக்களின் அத்தியாவசிய தேவைகளில் ஒன்றுபோல் ஆகிவிட்டது. பத்திரிகைகள் எவ்வாறு மக்களின் நண்பர்களாக இருக்கின்றனவோ, அதுபோன்று அவற்றில் உழைக்கின்ற பத்திரிகையாளர்களும் மக்களின் நண்பர்களாக விளங்குகின்றனர்.

கடந்த ஐம்பது வருடங்களுக்கு மேலாக தமிழ்பேசும் மக்களின் நண்பனாக, அவர்களின் அபிலாஷைகளையும் தேவைகளையும் பிரதிபலித்து அவர்தம் அன்பையும் அபிமானத்தினையும் பெற்று விளங்கும் வீரகேசரியில், ஏறக்குறைய முப்பதாண்டுகள், செய்தித்துறையில் முழுமூச்சுடன் உழைத்து, இளைப்பாறிய திரு. ஈ. வே டேவிட்ராஜுவின் சேவை நன்றியுடன் நினைவுகூரத் தக்கதேயாகும்.

அன்னாரின் சேவையைப் பாராட்டும் வகையில் சில அன்பர்கள் கொழும்பு தமிழ்ச் சங்க மண்டபத்தில், சமீபத்தில், ஓய்வுபெற்ற நீதியரசர் எச். டபிள்யு தம்பையா அவர்களின் தலைமையில் விழாவொன்றினை நடத்தியமையும் குறிப்பிடத்தக்கதாகும்;

முதலில் செய்தி நிருபராகவும், பின்னர் நீண்டகாலம் செய்தி ஆசிரியராகவும், பின்னர் சிலகாலம் பதில் ஆசிரியராகவும் பணிபுரிந்த திரு. டேவிட்ராஜு இலங்கையின் அரசியல், பொருளாதார, சமூக நிகழ்வுப் போக்கினை அனுபவபூர்வமாக அறிந்திருந்தாராகையினால் செய்திகளின் தராதம்மியங்களையும் அறிந்திருந்தார்.

''சில சந்தர்ப்பங்களில் பத்திரிகைகள் மௌனம் சாதித்திருந்தால் சில கலவரங்களையும் தவிர்த்திருக்கலாம்.'' என அவரே மேற்படி விழாவில் குறிப்பிட்டதுபோல, மக்களுக்கு உண்மைச் செய்திகளை வழங்கும் அதேவேளை, எவரையும் புண்படுத்தாமல், கண்ணியம் கலந்து பிரசுரிப்பதில் அவர் வெகு அக்கறை காட்டி வந்துள்ளார் என்பது நாமறிந்த ஒன்றே;

சிறந்த பத்திரிகையாளர்களின் பணி எட்டுமணித்தியாலத்துடன் மட்டுப்பட்டுவிடுவதில்லை. ''பசிநேரச்சுடர், கண்துஞ்சார், கருமமே கண்ணாயினர்'' என்பதுபோல், ''செய்தி'' களைப் பற்றியே எந்நேரமும் சிந்திப்பவராய் அதைத் தகுந்த முறையில், உரியநேரத்தில் வெளியிடும் ஆர்வம் கொண்வடராய்திரு. டேவிட்ராஜு கடமைபுரிந்தார் அவர் பத்திரிகைத் தொழிலில் கொண்டிருந்த அபிமானம் ஆழமானது.

''உண்மைச் செய்திகளை வழப்படுத்தி அதுவும் மக்கள் கண்ணோட்டத்தில் வழங்குவது. என்ற கொள்கைகளைத் தமது தொழிலில் தாரகமந்திரமாகக் கொண்டு செயற்பட்ட அவரது ''உள்ளதைச் சொல்வேன்'' என்னும் பந்தி வாசகர்களிடையே செல்வாக்குப் பெற்றதாகும். 'ராஜ்பதி' என்ற பெயரில் அவர் நடத்திய 'கலாமன்றம்' பகுதியும் ஒரு காலகட்டத்தில் தலைவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்திய ஒன்றாகும்.

''டேவிட்'' என பத்திரிகையாளர்களினாலும் ஏனையோராலும் அழைக்கப்பட்ட அவர், பழகுவதற்கு இனிய பண்பாளர் என்பது வெறும் ஒப்புக்காட்டிச் சொல்லப்படும் வார்த்தைகளல்ல. (இக் கட்டுரையாளர் உட்பட) இன்றைய அனேக பத்திரிகையாளர்களின் வழிகாட்டி அவர்.

எச் சமூகத்தவரும், எம்மதத்தினரும் அணுகுவதற்கு இனியவனாக விளங்கிய திரு. டேவிட் ராஜு அயராத உழைப்பாளி. தம் உழைப்பால் உயர்ந்தவர். இன்னும் வயதும் உடல்வலுவும் இருக்கின்றபோது அவர் பத்திரிகைத் தொழிலில் இருந்து ''ஓய்வு'' பெறுவது துரதிர்ஷ்டவசமானதே ''டேவிட்'' பத்திரிகைத் தொழிலில் இருந்து இப்போது ஓய்வுபெறுதல் கூடாது. அவர் பெற்ற அனுபவம் பேலும் பயன்பட வேண்டும் என்று தினகரன் பிரதம ஆசிரியர் திரு ஆர் சிவகுருநாதன் மேற்படி அவரது பாராட்டு விழாவில் குறிப்பிட்டதும் ஈண்டுக் குறிப்பிடக்கூடியதே. பொது நன்மையைக்கொண்ட நீண்டகால அனுபவங்கள் வீணாகிப் போவதை யார்தான் விரும்புவர்.

எனினும் திரு. டேவிட் ராஜு தமது எதிர்கால வாழ்க்கையை எண்ணி வெளிநாட்டுத் தொழில் வாய்ப்பினைப் பற்றிக்கொள்ளும் இச் சந்தர்ப்பத்தில் அச் சிறந்த பத்திரிகையாளருக்கு எமது மனமார்ந்த வாழ்த்தினைத் தெரிவிக்கின்றோம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தான் சிற்பியின் சாட்டை

பாக்கிஸ்தானின் சிருஷ்டி கர்த்தா, காலஞ்சென்ற காயிதே ஆஸம் முகம்மத் அலிஜின்னு பாரத நாட்டின் தலைசிறந்த சட்டத்தரணிகளின் முன்னணியில் நின்றவர். இவர் இங்கிலாந்தில் பாரிஸ்டர் (BARRISTER) பட்டம் பெற்றவர். அப்பொழுது பம்பாய் உயர் நீதிமன்றத்தில் ஒரு சிக்கலான வழக்கில் வாதம் செய்து கொண்டிருந்தார் காயிதே ஆஸம். அந்த வழக்கிற்குத் தலைமைதாங்கிய ஆங்கிலேய நீதிபதிக்கும் ஜின்னுசாகிப்பிற்கும் இடையிலே பலத்த வாக்கு வாதம் நடைபெற்றது. ஒரு கட்டத்தில் பொறுமையை இழந்த 'அந்த நீதிபதி திரு ஜின்னுவை நோக்கி ''மிஸ்டர் ஜின்னு அவர்களே நீங்கள் இரண்டாந்தர நீதிபதி ஒருவர் முன்னுல் பேசுகிறோம் என நினைத்து விடாதீர்கள்'' என்றாராம். அப்பொழுது ஜனாப்ஜின்னுசாகிப் அந்த வெள்ளைக்கார நீதிபதியை நோக்கி ''கனம் நீதிபதி அவர்களே தாங்கள் முன்னுல் வாதாடிக்கொண்டிருப்பது ஒரு இரண்டாந்தரசட்டத்தரணி என்று நினைத்து விடாதீர்கள்'' என்றாராம்.

மேலும் திரு ஜின்னுசாகிப் அவர்கள் ஒரு வழக்கிற்காக ஏற்பட்டால் மணித்தியாலக்கணக்கில் தான் தனது கட்சிக்காரர்களிடமிருந்து பணம் வாங்குவாராம். அதாவது ஒருவழக்கில் எத்தனை மணித்தியாலம் வாதாடுவாரோ அத்தனை மணிநேரத்திற்கும் மணிக்கு இவ்வளவு என்று பணம் வாங்கி விடுவார். ஒரு சமயம் தனது கட்சிக்காரர் ஒருவரின் வழக்கை இரண்டு மணித்தியாலத்தில் முடித்து விடுவேன் எனக்கூறி அதற்குரிய பணத்தையும் பெற்றுக்கொண்டார். ஆனுல் அந்த வழக்கை ஒன்றரை மணிநேரத்திற்குள்ளாகவே தன் கட்சிக் காரருக்குச்சாதகமாக முடித்துவிட்டார். எனவே மேலதிகமாக பெற்றுக்கொண்ட அரை மணித்தியாலத்திற்குரிய பீசை (FEES) அந்தக் கட்சிக்காரரிடம் திருப்பிக் கொடுத்துவிட்டார்.

— ராஜஹம்ஸ —



ஆசிரியர் : நெப்போலியன் பொனப்பார்ட் பற்றி தெரிந்தவற்றைக் கூறு.

மாணவன்: அவர் ஒரு ஹைப் பாட் காரன் சார்.

— அதிமதுரம்

## எமது கண்டுபிடிப்பு

எம்மவர் திறமைகள்
எத்தனை! எத்தனை! !
எடுத்துரைத்தாலோ
கண்ணீர் பெருகும்!
ஆனந்தத்தாலோ?
ஆத்திரத்தாலோ? ?

நெல்லை அவித்து
உலர்த்தி உடைத்து
அரிசியாக அதை
உருமாற்றும் போதிலும்
நெல்லுடன் இருக்கும்
கற்கள் எதுவுமே
உருவம் மாறுது
சிறிதும் சிதையாது
அரிசியிலும் அவை
தரிசனம் தரும்படி
செய்யவல்லவர் எவர்?
எம்மவர்! எம்மவர்! !

பப்பாளிப் பழத்தின்
உலர்ந்த விதைக்கும்
காரம் மிக்க
மிளகு விதைக்கும்
உருவத்தில் ஒற்றுமை
உண்டென்பதனை
கண்டவர் எவரோ?
நம்மவர்! நம்மவர்! !

இப்படி விரிக்கலாம்!
எப்படி முடிக்கலாம்?

-0 0 0-

— முருகு —

# ஒரு கேள்வி.......... இரு நாடுகள்

உலக யாத்திரிகர் ஒருவர் இந்தியாவிலுள்ள ஓர் ஆரம்பப் பள்ளிக்கு விஜயம் செய்தார். இந்தியச் சிறுவன் ஒருவனை அழைத்து, '' ஒரு பொருளை ஐந்து ரூபாய்க்கு வாங்கிப் பதினைந்து ரூபாய்க்கு விற்கிறுன் ஒரு வியாபாரி என்று வைத்துக்கொள் — அவனுக்கு என்ன கிடைக்கும் '' என்று கேட்டார்.

அவன் சட்டென்று '' பத்து ரூபாய் லாபம் கிடைக்கும்!'' என்றுன்.

அதே யாத்திரிகர் ருஷ்சியாவுக்குச் சென்றுர். அங்கே உள்ள ஆரம்பப் பள்ளிச் சிறுவனை அழைத்து அதே கேள்வியைக் கேட்டார்.

பையன் சற்று யோசித்தான். பிறகு தலை நிமிர்ந்து சொன்னுன்: '' அந்த வியாபாரிக்கு மூன்று மாதம் சிறைத்தண்டனை கிடைக்கும்!''

— மதுரை மணிவண்ணன் —



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பல்கேரிய நகைச்சுவைகள்

பஸ் கொண்டக்டர்: ஏன் பஸ்ஸிலிருந்து பாய்வதற்கு துடிக்கிறீர்கள்?

பிரயாணி: நான் ஆஸ்பத்திரிக்கு அவசரமாகப் போக வேணும்.

பஸ் கொண்டக்டர்: அப்படியென்ருல் குதித்திடுங்க ஆஸ்பத்திரிக்கு சீக்கிரம் போயிடலாம்.

போஸ் மாஸ்டர்: பாரம் கூடிய தபாலாக இருப்பதால் இன்னும் முத்திரை ஒட்ட வேணும்.

ஒருவர்: இன்னும் முத்திரை ஒட்டுவதால் மேலும் பாரம் கூடிடும்.

ஒருதாய்: நாங்கள் பிள்ளைகளை மாற்றி வளர்த்தால் நல்லது

மற்றத்தாய்: ஏன்?

ஒருதாய்: ஒரு தாய் மற்றவள் பெற்ற பிள்ளையில் பிழை காணும் குணமுடைய வராச்சே!

கார் சாரதி: உங்களால் தான் இந்த விபத்து ஏற்பட்டது.

மற்றவர்: இல்லை உங்களால்த் தான் ஏற்பட்டது.

கார் சாரதி: நான் 15 வருடம் கார் ஒட்டுகிறேன். என்னிலா பிழை காண்கிறீங்க.

ஒருவர்: நான் 50 வருஷம் பாத சாரியாக இருக்கிறேன் என் பதை நீங்க மறந்திடாதீங்க.

## தங்கமும் அலுமினியமும்

நெப்போலியன் ஒரு சமயம் சண்டை முடிந்து தன் நாடு திரும்பியதும் படைவீரர்களுக்கு குதூகலமான விருந்தொன்றை ஏற்பாடு செய்தான். அதில் வீரர்களுக்குத் தங்கத்தட்டிலும் தளபதிகளுக்கு அலுமினியத் தட்டிலும் உணவு வழங்கப்பட்டது. காரணம்? அப்பொழுதான் அலுமினியம் முதன் முதலில் கண்டுபிடிக்கப்பட்டது. ஆகையால் தங்கத்தைக் காட்டிலும் அலுமினியத்தின் மதிப்பு உயர்வாகக் கருதப்பட்டது. அலுமினியத்தட்டில் உணவு வழங்குவதை நாகரீகமாகக் கருதினுன் மாவீரன் நெப்போலியன்.

## செய்திச் சோடி


- 50 கோடி மக்கள் நாளாந்தம் பட்டினியுடன் படுக்கைக்குச் செல்கின்றனர்.
- உலகின் ஒரு நாளைய ஆயுதச் செலவு 200 கோடி ஆகும்.

## டாக்டரும் சட்டத்தரணியும்



டாக்டர்: அட்வகேட் கொஞ்சம் மந்தபுத்திக்காரனாக இருந்தால் கேஸ் வளர்ந்து கொண்டே போகும்.

அட்வகேட்: ஆமாம்! டாக்டர், கொஞ்சம் மந்தபுத்திக்காரராக இருந்தால் கேஸ் உடனுக்குடன் முடிந்துவிடும்.



ஆசிரியர்: ஒலியா, ஒளியா வேகமானது?

மாணவன்: இரண்டுமில்லை சார்...... மினி பஸ்

... அதிமதுரம் ...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹோம் பிறுன்ஸ் லிமிட்.

463, காலி வீதி,
கொழும்பு - 3
போன்: 589190

82, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 24310

## மக்கள் விரும்பும் பிறுன்ஸ் கொம்பனி

வீட்டுப் பொருட்கள் கடன் கொடுப்பனவுகாரர்,

வெளிநாட்டு ஏற்றுமதி இறக்குமதியாளர்,

படவிநியோகஸ்த்தர்கள்,

உல்லாச பஸ் சேவையாளர்,

காணி நில முதலீட்டாளர்கள்,

கட்டிட கொந்தராத்துக்காரர்,

புடவை விநியோகஸ்தர்,

அனைவருக்கும் சேவை செய்கின்றது.

நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமும்
**வளர்ந்து வருவது**

## ஹோம் பிறுன்ஸ் லிமிட்டட்

கிளை: இல. 82, கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம்.
போன்: 24310

தலைமையகம்:
ஹோம் பிறுன்ஸ் லிமிட்டட்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாமரம் நடுக.
## மாநலம் பெறுக.

- சமய வரலாறும் இலக்கியப் பெருமையும் மருத்துவ மகோன்னதம் கொண்டது மாங்கனி. காரைக்காலம்மையாருக்கு சிவன் மாங்கனி அருளினர்! தமிழ் இலக்கியம் முக்கனிகளில் ஒன்ருக மாங்கனியைப் போற்றுகின்றது.
- மாந்தளிர் கசாயம் வயிற்ருேட்டம் நீரிழிவு நோய்களைக் குணப்படுத்தும். முதிர்ந்த மாம் பட்டையை சாறு பிழிந்து பருகினல் இரத்த ஒழுக்குள்ள மூல வியாதிகள் குணமாகும்.

நேரம்

பொன்ஞனது

V




நேரம் பொன்னுனது
என உணர்ந்து
தயாரிக்கப்பட்ட சலவைப் பவுடர்.
நொடிப் பொழுதில் அழுக்கை
அகற்றி ஆடையை வெள்ளை வெளே
ரென ஒளிரச் செய்யும்
சலவைப் பவுடர்.

குறைந்த விலையில் நிறைந்த பயன்

தயாரிப்பாளர்:

# மில்க்வைற் தொழிலகம்

யாழ்ப்பாணம்

த. பெ. இல. 77 தொலைபேசி: 23233



பிரதம தபாற் கந்தோரில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பெற்றது பதிவு இல Q J. 35 (N) 83
● 550, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணத்தில் வசிக்கும் திரு. சிவஞானசுந்தரம் அவர்களால
550, கே. கே. எஸ். வீதியில் உள்ள சிரித்திரன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org